DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1552 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 2, 2026

# ”இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தைப் போன்ற ஒன்றை ஆரம்பித்ததிலும் பார்க்க அதை உறுதியுடனும் நம்பிக்கைகளுடன் தொடர்ந்து இயக்குவதே பாராட்டுக்குரியது”

## கனடா-இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்க 13வது ஆண்டு விழாவில் வர்த்தக மேம்பாட்டு விருதினைப் பெற்ற கனடியத் தமிழர் வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார் தெரிவிப்பு!

”இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தைப் போன்ற ஒரு பல நோக்கங்கள் கொண்ட அமைப்பை ஆரம்பிப்பதிலும் பார்க்க அதை உறுதியுடனும் நம்பிக்கைகளுடன் தொடர்ந்து இயக்குவதே பாராட்டுக்குரியது. பல அமைப்புக்களின் கடந்த பல வருடங்களாக இணைந்து பணியாற்றி வருகின்றவன் என்ற வகையில் எனது நம்பிக்கை எதுவென்றால் சங்கம் ஒன்றின் அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாக சபையினருக்கு இடையில் எப்போதும் உறவுகள் சீராக இருப்பது நிச்சயமான ஒன்றல்ல. எனினும் அவர்களுக்கிடையே ஏற்படும் உள்ளக முரண்பாடுகள், நிதி தொடர்பான பிரச்சனைகள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள் என்பவற்றை கலந்துரையாடி சுயவிமர்சனம் செய்து தீர்த்து வைத்து பின்னர் சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைப்பதே எமது கடமையாகும்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)






## எம் இடர்கள் களைய எழுந்தே வருக! 2026

**வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள், கட்டுரையாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

# ரொறன்ரோ "தாள லயா" இசைக் கல்விக் கூடம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதன் 21வது ஆண்டு நிறைவு விழா!



கனடா ரொறன்ரோ நகரில் நீண்ட காலமாக இயங்கிவரும் ஆசிரியர் ரவி செல்லையா அவர்களின் “தாள லயா“ இசைக் கல்விக் கூடம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதன் 21வது ஆண்டு நிறைவு விழா கடந்த 27-12-2025 அன்று சனிக்கிழமையன்று மாலை செந்தாமரை விழா மண்டபத்தில் நடைபெற்றது.

பல இசையாசிரியர்கள், இசைக் கலைஞர்கள், பெற்றோர்கள், இசை பயிலும் மாணவ மாணவிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் மண்டபத்தில் கூடியிருந்தார்கள்.

மேற்படி ஆண்டு விழாவிற்கு தமது ஆதரவை வழங்கியிருந்த ஸ்காபுறோ “விஜயா யுவல்லறி நகை மாளிகையின் உரிமையாளர்களுக்கு “தாள லயா“ இசைக் கல்விக் கூடத்தின் ஆசிரியர் ரவி செல்லையா மற்றும் பெற்றோர் ஆகியோர் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்டனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்த உலர் உணவு பொதிகளை வழங்குவதில் தாமதம் ஏன்?

- எஸ்.ஆர்.லெம்பேட் (24-12-2025)

மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டு நீண்ட நாட்களாக தொழிலை இழந்த மீனவர்களுக்கு ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய அனுப்பி வைக்கப்பட்டுள்ள உலர் உணவு பொதிகளை மீனவர்களுக்கு வழங்குவதில் உரிய அதிகாரிகளுக்கு என்ன பிரச்சனை ஏற்பட்டுள்ளது? என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் கேள்வி எழுப்பி உள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 24ம் திகதி புதன்கிழமை அன்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 13ஆம் தேதி மன்னார் மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஜனாதிபதி உரிய திணைக்களங்கள் ஊடாக கேட்டறிந்தார்.

இதன்போது மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்பான விடயங்கள் பேசப்பட்ட போது கடந்த வெள்ளம் மற்றும் புயல் காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டதோடு, வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளமை குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்கள் எண்ணிக்கை யை ஜனாதிபதி உரிய அதிகாரியிடம் கேட்டு தெரிந்து கொண்டார். மன்னர் மாவட்டத்தில் சுமார் 12,000 மீனவர்கள் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

குறிப்பாக நவம்பர் 27 இல் இருந்து கடந்த சில வாரங்களாக அவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டமையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

உடனடியாக விசேட விதமாக ஜனாதிபதி மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 12000 மீனவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் வகையில் உலர் உணவுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

குறித்த நிவாரணப் பொதிகள் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

12 ஆயிரம் மீனவர்களில் இதுவரை 6 ஆயிரம் மீனவர்களின் விவரங்களை மீனவ அமைப்புகள் ஊடாக அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. ஒரு சில சங்கங்கள் உரிய முறையில் பெயர் பட்டியலில் அனுப்பவில்லை எனவும் தெரிய வந்திருக்கிறது.




மொத்தமாக சுமார் 7,000 மீனவ குடும்பங்கள் பதிவுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டு இருக்கின்ற போதிலும் இதுவரை 2000 மீனவர்களுக்கான உலர் உணவு பொதிகள் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த உலர் உணவுப் பொருட்களை மீனவருக்கு வழங்குவதில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக பல்வேறு கதைகள் கருத்துக்கள் வெளியாகியிருக்கிறது.

தற்போது மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு விநியோகங்கள் இடம்பெற்று வருகின்ற இந்த நேரத்தில் உலர் உணவுகளை பெற்றுக் கொள்பவர்களில் மீனவ குடும்பம் இருந்தால் அந்த மீனவ குடும்பங்களுக்கு மீனவர்களுக்காக வழங்கப்படுகின்ற உலர் உணவு பொதிகள் வழங்கப்பட மாட்டாது என்ற கருத்துக்களும் தற்போது வெளிவந்துள்ளது.

குறித்த உலர் உணவு பொதிகள் விசேட விதமாக மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கவே ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனர்த்தம் ஒன்று ஏற்படுகின்ற போது முதலில் தொழில் நடவடிக்கைகளை நிறுத்துவது மீனவர்களே. ஆனால் மீனவர்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படுவதில்லை.

இந்த நிலையில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி விசேட விதமாக மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவு பொருட்களை வழங்குமாறு உத்தரவிட்டார்.

அந்த நிவாரணத்தை மீனவர்களுக்கு வழங்குவதில் அதிகாரிகளுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று தெரியவில்லை.குறித்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டிய நிலை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் மக்கள் சேவை



- எஸ்.ஆர்.லெம்பேட் (29-12-2025)

அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படும் தேசிய நிகழ்ச்சி த்திட்டமான கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேட நடமாடும் வேலைத்திட்டம் 29ம் திகதி அன்றைய தினம் திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்களுக்கு பல்வேறு சேவைகள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களாக ஜெகதீஸ்வரன், திலகநாதன், மன்னார் நகர
முதல்வர் டானியல் வசந்தன் உள்ளடங்களாக இராணுவ பொலிஸ் அதிகாரிகள்,திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆரம்ப நிகழ்வாக தூய்மையான இலங்கை பிரஜா சக்தி தேசிய ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து ஹிம்கம வேளைத்திட்டங்தின் கீழ் காணி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு பூரண அனுமதி பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மாந்தை மேற்கு, நானாட்டான் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 99 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் டித்வா சூறாவளி மற்றும் வெள்ள பாதிப்புக்களினால் ஏற்பட்ட இழப்புகளுக்கான அரசாங்கத்தினால் வழங்கப்படும் நஷ்ட ஈடு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டது.

இதன் போது கால்நடை வளர்ப்பாளர்கள் 10 பேருக்கும், விவசாய செய்கையாளர்கள் 09 பேருக்கும், மேட்டு நில பயிர் செய்கையாளர்கள் 11 பேருக்கு இவ்வாறு இழப்பீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இரத்ததான முகாம் ஒன்றும் இடம்பெற்றது. இதன்போது பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இதுவரை பிறப்பு இறப்பு சான்றிதழ்களை பெறாதவர்கள் அதனை பதிவு செய்யும் நடவடிக்கைகளும் முன் னெடுக்கப்பட்டதோடு பல்வேறு சேவைகளும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயணடைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.




**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்

SMART RESTORATION
We work with your insurance company

ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 ( Cell )
1-833-SMART 09 ( Office ) (76278)
info.smartrestoration@gmail.com
smart-restoration.net

SERVICES
- Water and flood services
- Sewage clean up
- Mold remediation
- Fire & smoke
- Trauma
- 24/7/365 days

LISENSED
INSURED
CERTIFIED

உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் அநுர அரசு சிறுகச் சிறுக சேகரித்து வைத்த திறைசேரியை குறி வைத்த "தித்வா" புயலும் வெள்ளப் பெருக்கும்!

தித்வா புயலின் விளைவான வெள்ளமும் மண்சரிவும் கடந்த நவம்பர் மாத இறுதிப்பகுதியில் இலங்கையின் அனைத்து துறைகளிலும் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. மழையுடன் சேர்த்து நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளை ஏற்படுத்திய இப்புயல் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களிலும் கடுமையான வெள்ள நிலை உருவாகியிருந்ததோடு மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் குறிப்பாக தேயிலை பயிரிடும் பிரதேசங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட வித்திட்டது. அதன் விளைவாக இந்த இயற்கை அனர்த்தங்கள் 16 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியை அச்சுறுத்தல் நிலைக்கு தள்ளியுள்ளதென கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 16 பில்லியன் டொலர்களாகிறது என்ற செய்தி இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாட்டு தூதரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வனர்த்தங்களால் ஏற்பட்டுள்ள அழிவு, சேதங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகள் கடந்த சில தினங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் உலக வங்கியின் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை இவ்வாரத்தின் ஆரம்பப்பகுதியில் வெளியானது. அந்த அறிக்கையின்படி, இந்த வெள்ளம், மண்சரிவுகளால் வீதிகள், பாலங்கள், மின்சாரக் கட்டமைப்புக்கள், தொலைத்தொடர்பு கட்டமைப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதாரத் துறைகளில் நாடு எதிர்கொண்டுள்ள பௌதீக ரீதியிலான நேரடிப் பாதிப்புக்களின் பெறுமதி 4.1 பில்லியன் டொலராகும். இது உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியில் 4 சதவீதமாகுமென தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் இந்த அனர்த்தங்களால் தொழிலாளர்கள் மத்தியிலும் தொழில் சந்தையிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த மதிப்பீடொன்றை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் மேற்கொண்டிருக்கிறது. அது தொடர்பான அறிக்கையை அந்த ஸ்தாபனம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டது. அவ்வறிக்கையின் படி, இந்த அனர்த்தங்களால் நாட்டில் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 இலட்சத்து 44 ஆயிரம் ஆண்களும் 1 இலட்சத்து 30 ஆயிரம் பெண்களும் அடங்கியுள்ளனர். இவர்களை துறைவாரியாக நோக்கும் போது விவசாயத்துறையில் 85 ஆயிரம் பேரும், கைத்தொழில் துறையில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேரும், சேவைகள் துறையில் 1 இலட்சத்து 64 ஆயிரம் பேரும் என்றபடி பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முகம் கொடுத்திருக்கும் மாதாந்த வருமான இழப்பின் பெறுமதி 48 பில்லியன் டொலர்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தரவுகளின் படி, இந்த இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அவர்களது மாதாந்த இழப்பும் சாதாரணமாக கடந்து செல்லக்கூடிய விடயமல்ல. 600 இற்கும் மேற்பட்டவர்களைக் காவு கொண்ட இந்த அனர்த்தங்கள், 22 இலட்சம் பேர் பாதிக்கப்படவும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கவும் காரணமாக அமைந்தது. பாதிக்கப்பட்டவர்களில் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்கள் அடங்கியுள்ளனர்.

இந்த தொழில் முயற்சியாண்மையாளர்களது தொழில் தளங்கள் மாத்திரமல்லாமல் அத்தொழில்களை முன்னெடுப்பதற்கு அவசியமான இயந்திர உபகரண வசதிகளும் பெரிதும் சேதமடைந்தும் பாதிக்கப்பட்டும் காணப்படுகின்றன.
அதனால் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்துறைகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரங்களில் ஏற்படும் சாத்தியமான விளைவுகளை விரைவான முறையில் மதிப்பிட உதவும் வகையில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் தயாரித்துள்ள இவ்வறிக்கை, அவசர நடவடிக்கைகள் மற்றும் இடைப்பட்ட கால முயற்சிகளை வழிநடாத்தவும் பயன்படுத்தக்கூடியதாக அமையும். குறுகிய காலத்தில் அவசர பொருளாதார உதவிகள் மற்றும் கண்ணியமான தொழில் நிலைகளை உறுதி செய்யும் தொழிலாளர் அடிப்படையிலான மீட்பு வேலைத்திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தல் இன்றியமையாதது. அத்தோடு சிறு, மற்றும் நடுத்தர துறைசார் நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறான சூழலில் தித்வா புயலின் விளைவான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டையும் மக்களையும் தொழில்துறைகளையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஏற்கனவே அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான திட்டங்களில் ஒன்றான "வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் ஒவ்வொருவரும் சிறிய தொகைப் பணத்தை அமெரிக்க டாலராகவோ, கனடிய டாலராகவோ அன்றி பிரித்தானியாவின் பவுண்ஸ் ஆகவோ அல்லது அவுஸ்ரேலியாவின் டாலராகவோ இலங்கையின் மத்திய வங்கிக் கணக்கு ஒன்றுக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் உயர் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளார்கள். இதே வேளை வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்து வரும் நிவாரணப் பணிகள் தொடர்பாக நாம் அறிந்து அகமகிழ்ந்துள்ளோம். குறிப்பாக எமது மக்கள் மலையகப் பகுதிகளுக்கு நான்கு திசைகளிலிருந்தும் ஆனப்ப வருகின்றார்கள். அதேபோன்று இலங்கை அரசினது வேண்டுகோளையும் ஏற்று தங்கள் தயாள சிந்தையை வெளிக்காட்ட வேண்டும் என்ற கோரிக்கையையும் இவ்வார பதிவின் மூலம் வேண்டிக் கொள்கின்றோம்.!

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

**முதியவரை பராமரிக்க ஆள் தேவை**

McCowan / 401 க்கு அருகில் வசிக்கும் 92 வயதான ஆண் முதியோரை பராமரிக்க முன் அனுபவம் உள்ள ஆள் தேவை.
தொடர்புகளுக்கு 647 273 2053

**House and Basement for Rent**

Tapscott and McLevin
3 bedroom house for rent. 1 bedroom basement for rent.
Call Kala at 416-299-4904

**Condo Townhouse for Rent**

2+1 bedrooms - New Condo Townhouse for rent.
Close to bus stop, school and shopping. Available immediately.
Call 647-201-8784

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "காட்சியழகும் சொற்செறிவுமே ஹைக்கூவின் சிறப்பு"

## "ஹைக்கூ முற்றம்" நிகழ்வில் கவிஞர்கள் பகிர்வு



"ஹைக்கூ முற்றம்" அமைப்பின் மாதாந்திர இலக்கிய நிகழ்வு, கோயம்பேடு எதிரேயுள்ள விக்டோரியா கார்டன் தரைத்தள அரங்கில் 21-12-2025 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கவிஞர் உ.முத்துக்குமாரசாமி தலைமையேற்றார். கவிஞர் கோசின்ரா அறிமுகம் செய்து உரையாற்றினார்.

"ஹைக்கூவும் நானும்..." எனும் தலைப்பில் கவிஞர் கா.பாபுசசிதரன் உரையாற்றுகையில், "ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ இன்று உலகின் திசையெங்கும் பரவியிருக்கிறது. 2015-ஆம் ஆண்டில் எனது அலுவலகப் பணி நிமித்தமாக நான் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, ஜப்பானியர்கள் ஹைக்கூ எனும் கவிதை வடிவம் மீது எவ்வளவு ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியந்து போனேன்.

1984-இல் கவிஞர் அறிவுமதி எழுதிய "புல்லின் நுனியில் பனித்துளி" எனும் ஹைக்கூ கவிதை நூலைப் படித்த பின்னரே எனக்கும் ஹைக்கூ எழுதும் ஆர்வம் பிறந்தது. இன்றைக்கு தமிழில் ஹைக்கூ புரிந்தும், புரியாமலும் பலரும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். காட்சியழகோடும் மொழிச் செறிவோடும் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளே சிறப்பான கவிதைகளாகப் பேசப்படும். காலங்கடந்தும் பேசப்படும். ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய புரிதலுக்கும் தெளிவுக்கும் இப்படியான சந்திப்புகளும் பகிர்வுகளுமே உதவி புரியும்" என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, தமிழ்க் கவிதையின் முன்னோடியும் 1985-ஆம் ஆண்டிலேயே "சூரியப் பிறைகள்" எனும் ஹைக்கூ நூலினைப் படைத்த மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பங்கேற்ற கவிஞர்கள் பலரும் ஹைக்கூ கவிதைகளை வாசித்தனர். சிறந்த ஹைக்கூ கவிதைக்குப் புத்தகப் பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்வை கவிஞர் மு.முருகேஷ் ஒருங்கிணைக்க, கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

நிகழ்வில், கவிஞர்கள் சக்திமான் அசோகன், ஞால.ரவிச்சந்திரன், புதுகை ஆதிரா, அன்புத்தோழி ஜெயஸ்ரீ, பாளை கோ.மாணிக்கம், அனுராதா சௌரிராஜன், நயினார், பா.மகாலெட்சுமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

படக்குறிப்பு: சென்னையில் நடைபெற்ற "ஹைக்கூ முற்றம்" நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்ற கவிஞர்கள் கா.பாபுசசிதரன், உ.முத்துக்குமாரசாமி ஆகியோருக்குப் புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன. அருகில், கவிஞர்கள் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம், கோசின்ரா, மு.முருகேஷ், அகவலன் ஆகியோர் உள்ளனர்.

# தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீடு என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்!



தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என கடத்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவரை தொடர்புகொண்டு வினவியவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தையிட்டி திஸ்ஸ விகாரை தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால் குறித்த விகாரை எமது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் அரசாங்கம் என்ற வகையில் குறித்த பிரச்சினையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர்பார்க்கின்ற நிலையில் விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக்காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக் கேற்ற அவர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளை வழங்குவதற்கு கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க குறித்த பிரச்சனையை அரசியல் ரீதியாக மாற்றிக்கொண்டு செல்கிறார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப் பாட்டில் எமது அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக் கூடாது.

ஆகவே அரசாங்கம் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக்காணியே என அமைச்சர் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடி ஏற்றியபோது முரணாக நடந்து கொண்ட அமைச்சர் சந்திரசேகரன்!



கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் குடை பிடித்தவாறு தேசியக்கொடி ஏற்றிய விவகாரமானது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் 24ம் திகதிபுதன்கிழமை அன்றையதினம் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு குடையை பிடித்தவாறு தேசியக் கொடியை ஏற்றியுள்ளார். தேசியக் கொடி என்பது நாட்டின் கொடி. அதனை ஏற்றுகின்ற போது அதற்குரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும். ஆனால் முன்மாதிரியாக செயற்பட வேண்டிய அமைச்சரே இவ்வாறு தேசியக் கொடியை ஏற்றிய சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கையை புரட்டிப்போட்ட "டித்வா" பேரிடரால் 20 ஆயிரம் சிறுவர்கள் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர் எனிகிறார் விஞ்ஞான சங்கத்தின் தலைவர் மைதிலி ரதீஸ்வரன்!



இலங்கையில் ஏற்பட்ட டித்வா வெள்ளப் பேர-ிடரால் சுமார் 20 ஆயிரம் சிறுவர்கள் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பிரிவு சங்கத்தின் தலைவர் மைதிலி ரதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் சமூக விஞ்ஞான பிரிவு நடத்திய "பேரிடரை எதிர்கொள்வோம்" "நல்லூரில் வெள்ளம்" கருத்தமர்வு நிகழ்வில் தலைமை உரையை ஆற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல தசாப்தங்களின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பேரிடராக டித்வா வெள்ளப் பேரிடர் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஒட்டுமொத்த இலங்கையிலும் அதன் பாதிப்புக்கள் உணரப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் 650 பேர் உயிரிழந்ததுடன் 200க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருக்கின்ற நிலையில் சுமார் 20 ஆயிரம் சிறுவர்கள் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

4 இலட்சத்து 73 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 5700 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளது.

சுமார் 16 ஆயிரம் கிலோமீட்டர் வீதிகள் சேதமடைந்துள்ள நிலையில் 270 கிலோமீட்டர் புகையிரத பாதைகளும் சேதம் அடைந்த நிலையில் 480 மேற்பட்ட பாலங்கள் பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது.

இலங்கையின் பொருளாதார இழப்பு 6 தொடக்கம் 7 பில்லியன் அமெரிக்க டாலராக எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் 20 வீத பயிர்ச்செய்கை பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தை பொருத்தவரையில் மன்னார் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ் மாவட்டம் குறைந்த அளவு பாதிப்பையே எதிர்நோக்கி இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# "பாதையே இல்லை, வட்டகொடை தோட்டம், யொக்ஸ்போட் பிரிவு யொக்ஸ்போட் தமிழ் வித்தியாலயம் மாணவர்கள் எப்படி போவார்கள்?" - இது கல்விக்கான கோரிக்கை

வட்டகொடை தோட்டம், யொக்ஸ்போட் பிரிவில் (WATTEGODDE, YOXFORD) அமைந்துள்ள யொக்ஸ்போட் தமிழ் வித்தியாலயம் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இந்த பாடசாலையில் கற்கும் மாணவர்களையும், கற்பிக்கும் ஆசிரியர்களையும் வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு செல்லுமாறு அதிகாரிகள் அறிவித்துள்ளதாக மாணவர்களும், பெற்றோரும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், இந்த படசாலையில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு செல்வதற்கான சரியான பாதை வசதிகள் இல்லை என்பதோடு, சிறுவர்களை அந்த பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் நடைமுறைச் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் பிள்ளைகளே யொக்ஸ்போட் பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

ஆகவே, வட்டகொடை பாடசாலைக்கு காலையில் பிள்ளைகளை அழைத்துச் சென்று பின்னர் பிற்பகல் வேளையில் மீண்டும் வீட்டுக்கு அழைத்து வருவதற்கான இயலுமை தமக்கு இல்லையென தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



ஆகவே பாதுகாப்பான இடத்தில் மீண்டும் யொக்ஸ்போட் தமிழ் வித்தியாலயத்தை அமைத்து தமது பிள்ளைகளின் கல்வி கற்கும் வாய்ப்பை உறுதிப்படுத்துமாறு தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஆரோக்கியமான ஆலோசனைகள் அடுத்த 10 ஆண்டுக்குள் தீவகத்தை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பும்

## MP ரஜீவன் சுட்டிக்காட்டு!

ஆலோசனைகள் ஆரோக்கியமானதாக இருந்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தீவகத்தின் அபிவிருத்தியை அதன் இலக்கு நோக்கி முன்னகர்த்த முடியும் என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.

24ம் திகதி புதன்கிழமை அன்று காலை 10 மணியளவில் வேலணை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கூட்டம் ஆரம்பமான நிலையில் பிரதேசத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், இப்பிரதேச அபிவிருத்தி சார் ஆலோசனைகளில் தவிசாளர், பிரதேச சபையின் உறுப்பினர்களை நான் முன்னிலைப்படுத்தவே விரும்கின்றேன்.

ஏனெனில் அவர்களது ஒத்துழைப்பு இப்பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணும் சக்தியாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

எனவே வேற்றுமைகள் புறக்கணிப்புக்கள், எமது பிரதேசத்தில் இருப்பதற்கோ உருவாகுவதற்கோ நான் இடமளிக்க மாட்டேன். அதன்படி இன்றைய கூட்டம் மிக ஆரோக்கியமானதாக இருந்தது.

மேலும் மக்களின் அபிவிருத்திகள் பேதமின்றி முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் வனவள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட வேண்டிய காணிக தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதேபோன்று அராலிச் சந்திப் பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைப்பதற்கான இடமும் அடையாளம் காணப்பட்டது என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த பின்னடிக்கின்றது கனியவள திணைக்களம்

## பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குற்றச்சாட்டு!

மண்கும்பான் பகுதியில் சில நபர்களால் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச செயலகம் எழுத்து மூலம் கனியவள திணைக்களக்கத்துக்கு கோரிக்கை விடுத்தும், அத்திணைக்களம் நடவடிக்கை எடுப்பதில் தளர்வுப் போக்கு அல்லது அக்கறை இன்மை காட்டுவதாக வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று நடைபெற்ற நிலையில், இவ்விடையம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி குறித்த பின்னடிப்புக்கான காரணத்தை வழங்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரால், கோரப்பட்டது.

இதன்போது கனியவள திணைக்களத்தின் அதிகாரி கூறுகையில், மண் அகழ்வு நடவடிக்கையின் போதே, தங்களால் குறித்த நபரையோ குழுவையோ சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த முடியும். அதனால் சாட்சிகள் இல்லாது சட்டத்தின் முன் யாரையும் நிறுத்த முடியாது.

அவ்வாறு ஆதாரங்கள் கிடைத்தாலும் எமக்கான பாதுகாப்பு இல்லை. எனவே இவற்றையும் நாம் கவனத்தில் கொள்ளவு அவசியம். மேலும் பொலிசாரும் கிராம சேவகரும், ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

துறைசார் அதிகாரியின் கருத்தை நிராகரித்த பிரதேச செயலர், கிராம சேவகருக்கு இவ்விடையம் ஒரு சிறு பங்குதான், ஆனால் கனியவள திணைக்களத்தின் முழுமையான பொறுப்பு அல்லது கடமை இது சார்ந்ததாகவே இருக்கின்றது.

அதே நேரம் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடந்தால் அதை தடுக்கும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் அதிகாரம் இருக்கின்றது. ஆனால் நாம் நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பினால் பொலிசாரிடம் முறையிடுங்கள் என எமக்கு பதில் கடிதம் எழுதுகின்றீர்கள்.

எமக்கெழுதும் கடிதத்தை ஏன் நீங்கள் பொலிசாருக்கு எழுதி நடவடிக்கை எடுக்க முடியாது. அது உங்களுக்குரிய பொறுப்பு என சுட்டிக்காட்டினார்.

இன்நிலையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கருத்துக் கூறுகில், அப்பகுதி மக்கள் ஆதாரம் தருகின்றார்கள். பிரதேச சபையும் ஒத்துழைப்பு தருகின்றது. பொலிசாரும் தமக்குரிய பங்களிபை செய்கின்றனர்.

சட்ட நடசடிக்கை எடுக்கும் அதிகாரம் அத்துறைசார் திணைக்களத்துக்கே உரியது. எனவே கனியவளத் திணைக்களம் தனது பொறுப்பை அடுத்தவர் மீது சுமத்தாது கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.


அந்த வகையில் அடுத்த வருடம் ஜனவரி முற்பகுதிக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜோசப் பரராஜசிங்கம்!

## மட்டக்களப்பின் ஊடக முன்னோடி மற்றும் தமிழ் தேசிய அரசியலின் மாவீரன்




துணிவு, ஊடகவியல், சமரசமற்ற கொள்கைகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு நேர்மையும் நிதானமும் கொண்டு தன் பணி செய்த ஒரு உத்தமரின் வரலாற்றுப் பதிவு.

அன்னார் பற்றிய அறிமுகத்தைச் செய்யும் போது எமது உள்ளம் புளாங்கிதம் அடையும். அவரது வாழ்க்கை பற்றிய விபரங்களைப் பார்ப்போம். ஜோசப் பரராஜசிங்கம் - "ஜோசப் அண்ணா" என அன்புடன் அழைக்கப்பட்டவர் - வெறும் ஒரு தனிநபர் அல்ல; அவர் தன்னுள் பல தளங்களை ஒன்றிணைத்த ஒரு வரலாற்று நிறுவனம்.

ஊடகவியலாளர், தமிழ் தேசியவாதி, மனித உரிமைப் பாதுகாவலர், நாடாளுமன்ற உறுப்பினர், மேலும் கிழக்குத் தமிழ்ச் சமூகத்தில் உருவான பல தலைமுறை ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கான வழிகாட்டி மற்றும் நெறியாளர் எனப் பன்முக அடையாளங்களைத் தன்னகத்தே கொண்டவர்.

25 டிசம்பர் 2005 அன்று நிகழ்ந்த அவரது படுகொலை ஒரு கொடூரமான உடல் முடிவாக இருந்தபோதிலும், அவரின் அறிவுசார், அரசியல், ஊடகப் பாரம்பரியம் தமிழ் தேசத்தின் ஆன்மாவில் ஆழமாகவும் நிரந்தரமாகவும் பதிந்துள்ளது.

அவர் ஆற்றிய அனைத்துப் பணிகளிலும், 1960கள் முதல் 1990 வரை - ஒரு ஊடகவியலாளராகவும், ஊடக ஒருங்கிணைப்பாளராகவும் அவர் செயல்பட்ட காலமே அவரது வாழ்வின் மிக முக்கியமானதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான கட்டமாகும்.

ஆரம்பகால ஊடகப் பயணம்: மட்டக்களப்பின் குரல்: 1960களிலிருந்து: எதிர்ப்பின் வடிவமாக ஊடகவியல் ஜோசப் பரராஜசிங்கம் தனது ஊடகப் பயணத்தை 1960களில் ஆரம்பித்தார். அது இலங்கை ஊடக வெளியில் தமிழ் குரல்கள் - குறிப்பாக கிழக்கு மாகாணத் தமிழ் குரல்கள் - திட்டமிட்ட முறையில் ஒதுக்கப்பட்ட காலகட்டமாகும்.

குணசேனா அச்சகத்தினால் வெளியிடப்பட்ட தினபதி மற்றும் சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் மட்டக்களப்பு நிருபராக அவர் பணியாற்றினார்.

அக்காலத்தில், அந்த ஊடக நிறுவனங்கள் நிருபர்கள் மீது கடுமையான ஆசிரியக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தன. ஆயினும், ஜோசப் பரராஜசிங்கம் அந்த நிறுவன வரம்புகளைத் தாண்டி, ஊடக சுதந்திரத்தை நடைமுறையில் நிலைநாட்டியவர்.

அக்கால அரசியல் சூழலில், இது அதிக ஆபத்தையும், பெரும் துணிச்சலையும் வேண்டிய செயற்பாடாகும்.

1980களின் மட்டக்களப்பு ஊடகச் சூழல்

இராணுவமயமாக்கலின் கீழ் ஊடகவியல்

1980களின் முற்பகுதியில், மட்டக்களப்பு நகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே ஊடகவியலாளர்கள் இருந்தனர்:

- பி. ஜோசப் - செ. நாகராசா - வி. எஸ். கதிர்காமத்தம்பி - ஆர். உதயகுமார் - ஆர். நித்தியானந்தன் - செழியன் பெரின்பநாயகம் - ராமசாமி துரைரத்தினம் ஆகியோர்.

ஒவ்வொருவரும் தனித்துவமாகச் செயற்பட்டாலும், இராணுவக் கண்காணிப்பு, அச்சுறுத்தல், கைது போன்ற சூழல்களில் ஊடகவியல் நடத்த ஒற்றுமையும் கூட்டு நிலைப்பாடும் அவசியம் என்பதை உணர்ந்து, அவர்கள் ஒருமித்த செயற்பாட்டை மேற்கொண்டனர்.

பின்னாளில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தபோது, ஊடகவியலாளர்களுக்கான ஒரு நிறுவன ரீதியான பாதுகாப்பு அமைப்பு தேவை என்பது தெளிவானது. இதனால் ஒரு மைல்க் கல்லாகத் தோன்றியது கிழக்கு இலங்கை ஊடகவியலாளர் சங்கம் - 1982.

இந்தத் தேவையின் விளைவாக, 1982ஆம் ஆண்டு, கிழக்கு மாகாணத்தின் முதலாவது பிராந்திய ஊடக அமைப்பான கிழக்கு இலங்கை ஊடகவியலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

தலைவர்: ஜோசப் பரராஜசிங்கம் - செயலாளர்: செல்லையா நாகராசா


மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை ஒருங்கிணைத்த இந்தச் சங்கம், கொழும்பு மைய ஊடக ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு வரலாற்றுப் பதிலாக உருவானது.

1982 முதல் 2004 வரை, இந்தச் சங்கம் ஒரு ஊடக அமைப்பாக மட்டுமன்றி, சமூக, அரசியல், மனித உரிமைச் செயற்பாட்டுத் தளமாகவும் செயல்பட்டது.

மனித உரிமைச் செயற்பாடாக ஊடகவியல். யாரும் துணியாதபோது அரசு வன்முறைகளை ஆவணப்படுத்தல் போன்ற விடயங்களில் அக்கறையுடன் செயற்பட்டது அவரது ஊடக அமைப்பு 1983க்குப் பிறகு, ஆறாவது திருத்தச் சட்டத்திற்கு சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்ததால் TULF நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி இழந்தனர்.

இதனால், தமிழ் மக்கள் - குறிப்பாக கிழக்கில் - அரசியல் பாதுகாப்பற்ற நிலையில் தள்ளப்பட்டனர்.

இந்த அரசியல் வெற்றிடத்தில், மட்டக்களப்பு தமிழ் மக்களின் நடமாடும் பாதுகாவலராக ஜோசப் பரராஜசிங்கம் உருவெடுத்தார்.




ஒரு ஊடகவியலாளராக அவர்:

- தன்னிச்சையான கைதுகள், காணாமல் போதல்கள், சித்திரவதைகளை ஆவணப்படுத்தினார்
- பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களைச் சேகரித்து வழக்குக் கோப்புகளாக மாற்றினார்
- உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை Amnesty International போன்ற சர்வதேச அமைப்புகளிடம் எடுத்துச் சென்றார்
- காவல்துறை உயர் அதிகாரிகளுடன் இருந்த தொழில்முறைத் தொடர்புகளைப் பயன்படுத்தி, கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுவிக்கப் போராடினார்

இவ்வாறாகத் தனது ஊடகப் பணியோடு மக்கள் பணியையும் இணைத்தே செயற்பட்டார். பின்வரும் விடயத்தை தனது தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கினார். செய்திக்காக செய்த ஊடகவியல் அல்ல - மக்களின் உயிர்வாழ்விற்கான ஊடகவியல்.

புலனாய்வு ஊடகவியல்: "சூறாவளிப் புரையோட்டம்" 1978 - சூறாவளிக்குப் பிந்தைய ஊழல் அம்பலம்

1978ஆம் ஆண்டு மட்டக்களப்பைச் சீர்குலைத்த சூறாவளிக்குப் பின்னர், புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட பெருந்தொகை நிதிகளில் பெரும் ஊழல்கள் நடந்தன. அவற்றில் ஜோசப் பரராஜசிங்கம் அம்பலப்படுத்தியவை: பின்வருமாறு அமைகின்றன

- போலி கட்டுமானக் கணக்குகள்
- நிவாரண நிதி துஷ்பிரயோகங்கள்
- நன்கொடையாக வந்த பால்மா, உலர் உணவுகள் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை

"சூறாவளிப் புரையோட்டம்" என்ற தொடர் கட்டுரை, சிந்தாமணி பத்திரிகையில் வெளியானபோது, மக்கள் இதுவரை அறியாத உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன.

இது புலனாய்வு ஊடகவியல் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கான வரலாற்று மாதிரி ஆகும். பரபரப்புக்கு அப்பாற்பட்ட ஊடக அறம் அமரர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களிடத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது.

ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள், தனிப்பட்ட புகழையோ பரபரப்பையோ அல்ல - தமிழ் சமூகத்தின் கூட்டு நலனையே தனது ஊடகவியலின் மையமாகக் கொண்டார்.

மட்டக்களப்பு சிறை உடைப்பு போன்ற மிக உணர்வுபூர்வமான நிகழ்வுகளின்போது, பொது பாதுகாப்பு மற்றும் அரசியல் விளைவுகளை கருத்தில் கொண்டு, சில தகவல்களை வெளியிடாமல் காக்கும் ஊடக அறத்தையும் கடைப்பிடித்தார்.

இளைய ஊடகவியலாளர்களுக்கு, அவர் ஒரு முன்னோடி மட்டுமல்ல - அறமும் அரசியலும் கற்றுக் கொடுத்த ஆசான்.

அன்னாரது பொற்காலம்: 1990 வரை

1990இல் நாடாளுமன்ற அரசியலுக்குள் நுழைவதற்கு முன்பான காலமே ஜோசப் பரராஜசிங்கத்தின் பொற்காலம்.

அக்காலத்தில்: - ஊடகவியல் - மனித உரிமைப் பாதுகாப்பு - தமிழ் தேசியம் ஆகிய மூன்றும், அவரிடம் ஒரே அரசியல் நெஞ்சோட்டமாக ஒன்றிணைந்திருந்தன. இவற்றினை தனது நெஞ்சிலே சுமந்தவராய் அவடர் உலகெங்கும் பயணித்தார்.

அவரது வலிமை: - ஆழ்ந்த தமிழ் மொழிப்புலமை . அஞ்சாத துணிவு - கொள்கைகளில் சமரசமற்ற நிலை என்பது குறிப்பிடத்தக்கது

2004: கொள்கைகளுக்கான இறுதிப் பரிசோதனை கருணாவின் உத்தரவை நிராகரித்தல் 2004 பொதுத் தேர்தல் காலத்தில், கருணா விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்த சூழலில்: - வேட்பாளர்கள் கருணாவுடன் இணையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர் - புலிகளின் தலைமையுடன் தொடர்பைத் துண்டிக்க உத்தரவிடப்பட்டது. பலர் அச்சத்தால் பணிந்தனர். அனால் எமது ஜோசப் பரராஜசிங்கம் என்னும் நியாயம் காத்துநின்றவர் மட்டும் மறுத்தார்.

அப்போது அஅவர் கூறினார்: "வடகிழக்குத் தமிழ் தாயகக் கோட்பாட்டை என்னால் கைவிட முடியாது. அதற்காகப் போராடும் தலைமையுடனேயே நான் நிற்பேன்." இந்த நிலைப்பாடே அவரது மரணத் தீர்ப்பாக மாறியது.

சர்வதேசச் சதிப் பின்னணியில் படுகொலை அத்துடன் 'Project Beacon' இலக்கு வைக்கப்பட்ட அழிப்பு அப்போது நிகழ்ந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை, தமிழீழ நடைமுறை அரசையும், அதன் அரசியல் காவலர்களையும் அழிக்கும் ஒரு உலக - பிராந்திய வியூகத்தின் ஒரு பகுதியாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

அத்துடன் இந்தச் சதித் திட்டத்தில்: - இலங்கை புலனாய்வுப் பிரிவு - கருணா - பிள்ளையான் துணை இராணுவம் - சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகளின் ஒத்துழைப்பு ஆகிய மோசமான சக்திகள் அனைத்தும் பின்னிப் பிணைந்திருந்தன.

அத்துடன் இன்னொரு கொடிய நோக்குடன் தமிழர்களது எதிரிகள் செயற்படத் தொடங்கினர். இதில் தமிழர் விரோதிகளான தமிழ்ர்களும் இணைந்திருந்தனர். அந்த வகையில் புலிகளின் சிந்தாந்தத் தொடர்ச்சியைப் பேணக்கூடியவர்கள் திட்டமிட்டு ஒழிக்கப்பட்டனர்.

இந்த கபட நாடகத்திற்கு பலியாகப் போகின்றவர்களுள் ஜோசப் பரராஜசிங்கம் அதில் ஒரு முக்கியமானவராக எதிரிகளால் கணிக்கப்பட்டிருந்தார்.

அவரது படுகொலை: - இணக்க அரசியல் - அடிபணிவுத் தலைமைகள் - தமிழ் நாடாளுமன்ற அரசியலில் சித்தாந்த நீர்த்துப்போதல் என்ற நிலைகளுக்கு வழி திறந்தது.

ஒரு வரியில் சொன்னால்:

அவரது இரத்தம், சரணாகதி அரசியலுக்கான பாதையை விரித்தது என்னும் கொடூரம் அரங்கேறியது எனினும் அவரது நினைவு ஒரு இயக்கமாக மாற வேண்டும் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் அவரது இழப்பை ஓர் சடங்காக நினைவு கூர்வதில் பயன் இல்லை.

அவரது அரசியலைத் தொடர்வதே உண்மையான நினைவேந்தல்.

அது: அஞ்சாத ஊடகவியல் - கொள்கை சார்ந்த தமிழ் அரசியல் - வாய்ப்புவாதத்திற்கான நிராகரிப்பு - கூட்டு சுயகௌரவப் பாதுகாப்பு என்பவற்றில் தான் வெளிப்பட வேண்டும்.

அவர் ஊடகவியலாளராக வாழ்ந்தார். ஒரு தேசியவாதியாக உயிர் நீத்தார். மட்டக்களப்பின் மற்றும் எமது முழுயான தமிழ் தேசத்தின் - வரலாற்று மனசாட்சியாக என்றும் வாழ்வார். என்பதை நாம் அனைவரும் மனதிற் கொள்ள வேண்டும்.

ஆக்கம்: ஈழத்து நிலவன்
தமிழ் தேசிய வரலாற்றாசிரியர்
சர்வதேச அரசியல், பொருளாதாரம், புலனாய்வு மற்றும் இராணுவ விவகார ஆய்வாளர்



# உக்ரைன் – ரஷியா போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் முன்னேற்றம் என்கிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப்

உலக செய்திகள் World News

உக்ரைன் - ரஷியா இடையே போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளையில், போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 20 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக உக்ரைன் - அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடந்தது. நீண்ட இழுபறிக்கு பின் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பெரும்பாலான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். இந்த சூழலில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பை இன்று ஜெலென்ஸ்கி சந்தித்தார். அந்த சந்திப்பின் போது பொருளாதார ஒப்பந்தம் குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனிடையே ஜெலென்ஸ்கி உடனான சந்திப்புக்கு முன் ரஷிய அதிபர் புதினுடன் டிரம்ப் தொலைபேசியில் பேசி இருந்தார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறுகையில், "நாங்கள் (ஜெலென்ஸ்கியுடன்) ஒரு சிறந்த சந்திப்பை நடத்தினோம். நாங்கள் நிறைய விஷயங்களைப் பற்றி விவாதித்தோம். உங்களுக்குத் தெரியும், புதினுடனான தொலைபேசி அழைப்பு சிறந்ததாக இருந்தது. அது இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. நாங்கள் நிறைய விஷயங்களைப் பற்றி விவாதித்தோம். நாங்கள் மிகவும் நெருக்கமாகி வருகிறோம் என்று நினைக்கிறேன். புதினும், நானும் இப்போதுதான் ஐரோப்பிய தலைவர்களிடம் பேசினோம்... அந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் நாங்கள் நிறைய முன்னேற்றம் அடைந்துள்ளோம், இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்த மிகக் கொடிய போராக இருக்கலாம்" என்று தெரிவித்தார்.

# வங்காளதேச முன்னாள் பிரதமரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அவரது மருத்துவர் தகவல்



வங்காளதேச முன்னாள் பிரதமர் கலிதா ஜியா (வயது 80). இவர் 1991ம் ஆண்டு முதல் 1996 வரையும், பின்னர் 2001 முதல் 2006 வரையும் வங்காளதேசத்தின் பிரதமராக செயல்பட்டுள்ளார்.

இதனிடையே, உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட கலிதா ஜியா கடந்த மாதம் 23ம் தேதி முதல் டாக்காவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 11ம் தேதி முதல் அவருக்கு செயற்கை சுவாசக்கருவி பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், கலியா ஜியாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமாகி வருவதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் தெரிவித்துள்ளார். அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், கலியா ஜியா தற்போது மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளதாகவும் மருத்துவர் தெரிவித்துள்ளார். கலியா ஜியா தொடர்ந்து மருத்துவக்குழுவின் கண்காணிப்பில் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்வீடனில் பனிப்புயல் வீசியதால் 3 பேர் உயிரிழப்பு



ஐரோப்பிய நாடுகளில் கடும் குளிர் நிலவுகிறது. பல நாடுகளில் பனிப்பொழிவு வழக்கத்தைவிட அதிகமாக உள்ளது. குறிபாக, ஸ்வீடன் நாட்டில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில், ஸ்வீடனில் திடீரென பனிப்புயல் வீசியது. இந்த பனிப்புயலில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். பனிப்புயலின்போது காற்றின் வேகமவும் அதிகமாக இருந்தது. பனிப்புயலால் பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும், ஒருசில இடங்களில் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

# தமிழர் அரசியலுக்கான புத்தாண்டுப் பலன்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



ஒரு ஆண்டுக்குரிய பலன் என்பது கடந்த ஆண்டில் கிடைத்தவை, கிடைக்காதவை என்பவற்றின் விளைவுதான். இருப்பவற்றில் இருந்துதான் அரசியல் செய்யலாம்.அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகள் என்றால் இருப்பவைதான். இல்லாதவை அல்ல. எனவே கடந்த ஆண்டில் என்னென்ன இருந்தனவோ அவற்றின் விளைவுதான் புதிய ஆண்டு. இந்த இயற்கையை மீறி ஏதாவது நடப்பதாக இருந்தால் அதனை அதிசயம் அல்லது அற்புதம் என்று அழைக்க வேண்டும். யூதர்களின் புலப்பெயர்ச்சி வரலாற்றைக் கூறும் "தாயகம் நோக்கிய பயணம்" என்ற நூலில் ஓரிடத்தில் கூறப்படுவது போல "அதிசயங்கள் அற்புதங்களின் காலம் எப்பொழுது முடிந்துவிட்டது". இது ஈழத் தமிழர்களுக்கும் பொருந்துமா?

அப்படி அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்வது என்றால் அதுகூட ஏற்கனவே இருப்பவற்றுள் ஏதாவது ஒன்று எதிர்பாராத புதிய மாற்றங்களை அடைய வேண்டும். தமிழ் அரசியலில் ஏற்கனவே பலமாகக் காணப்படும் அம்சங்களில் அல்லது நபர்களில் வழமைக்கு மாறான மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டும்தான் இயற்கை விதிக்கு மாறாக ஏதாவது அதிசயங்கள் அற்புதங்களை எதிர்பார்க்கலாம். எனவே, இப்பொழுது கடந்த ஆண்டின் முடிவில் எம்மிடம் இருப்பவற்றை முதலில் மதிப்பிடுவோம்.

கடந்த ஆண்டு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெருமளவுக்கு ஒரு தோல்வி ஆண்டுதான். ஆண்டின் தொடக்கத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஓர் அரசாங்கம் ஏற்கனவே ஆட்சிக்கு வந்திருந்தது. ஆண்டின் முடிவில் அந்த அரசாங்கம் வடக்கில் முதலாவது பிரதேச சபையைக் கைப்பற்றி விட்டது. முள்ளிவாய்க்கால் பிரதேசம் அமைந்திருக்கும் கரைத் துறைப் பற்று பிரதேச சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றி விட்டது.

ஆண்டின் தொடக்கமும் தோல்வி. முடிவும் தோல்வி. இடையில் செம்மணிப் புதை குழி புதிய வாய்ப்புகளைத் திறந்தது. ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வந்தார். எனினும் ஐநா தீர்மானம் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக அமைந்தது மட்டுமல்ல அது ஒரு தெளிவான செய்தியைக் கூறியது. தமிழ் மக்கள் அனைத்துலக அரங்கிலும் பலமாக இல்லை என்பதே அது. அதே செய்தியைத்தான் ஆண்டின் முடிவில் இந்திய வெளியுறவு அமைச்சருடைய வருகையும் நிரூபித்தது.

தமிழ்க் கட்சிகளில் ஒரு பகுதி தமிழகத்தை நோக்கிச் சென்றது. இன்னொரு பகுதி கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரை நோக்கிச் சென்றது. இவ்வாறு தமிழ்த் தரப்பு இரண்டாக இந்தியாவை அணுகியபோது, இந்தியா கொழும்பை நோக்கி வந்தது. கொழும்பில், இந்திய வெளியுறவு அமைச்சரைத் தமிழ்க் காட்சிகள் ஒன்றாகச் சந்தித்தன. ஆனால் இரண்டாகக் கோரிக்கைகளை முன் வைத்தன. தமிழரசுக் கட்சி ஓர் ஆவணத்தை என்வலப்பில் வைத்துக் கொடுத்தது. அதில் என்ன இருந்தது என்று மற்றவர்களுக்குத் தெரியுமா? மக்களுக்குத் தெரியுமா?

கடந்த ஆண்டு முழுவதிலும் தமிழ் மக்கள் பெற்ற பின்னடைவுகளைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகக் கிடைக்கும் விடை என்ன தெரியுமா? ஒற்றுமை இன்மையால் கிடைத்த தோல்வி. எனவே புதிய ஆண்டு ஒரு வெற்றி ஆண்டாக அமைவதாக இருந்தால் ஒற்றுமைப்படுவதைத்தவிர வேறு வழி இல்லை.

கடந்த ஆண்டு முழுவதிலும் அவ்வாறு ஒற்றுமைப்படுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தொகுத்துப் பார்க்கலாம். புதிய நாடாளுமன்றத்தில் காணப்படும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்து ஒரு கூட்டாகச் செயல்படுவதற்கு கஜன் முயற்சி செய்தார்.அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதனால் அந்தப் புதிய யாப்பை எதிர்ப்பதற்குத் தமிழ்க் கட்சிகள் ஒன்றாகத் திரள வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் தமிழரசுக் கட்சி அதற்கு ஒத்துழைக்கவில்லை.

மற்றொரு முயற்சி, அதுவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டது. அது தமிழரசுக் கட்சி அல்லாத ஏனைய கட்சிகளை இணைத்து ஒரு கூட்டை உருவாக்கும் ஒரு முயற்சி. முதலில் தமிழ்த் தேசியப் பேரவை என்று உருவாக்கப்பட்டது. அது அடுத்த கட்டமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொண்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான உடன்படிக்கையானது எழுத்துமூல ஆவணம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது.

எனினும், அந்தக் கூட்டுக்குள் காணப்பட்ட ஈபிஆர்எல்எ.்.ப் கட்சியானது மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டு, தமிழ்ப் பகுதிகளில் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியதன் விளைவாக ஏற்பட்ட முரண்பாடுகளால் அந்தக் கூட்டு பெருமளவுக்கு செயற்படா நிலையை அடைந்து விட்டது. அந்தக் கூட்டு உருவாகும்போது கஜேந்திரகுமார் ஊடகங்களுக்குத் தெரிவித்த ஒரு கருத்து ஊன்றி கவனிக்கத்தக்கது. இந்த "ஐக்கியம் உடையுமாக இருந்தால் தமிழ் மக்கள் அதைத் தாங்க மாட்டார்கள்" என்று அவர் சொன்னார்.

அதன் பின் ஐநா தீர்மானத்தை முன்னோக்கி, தமிழ்க் கட்சிகளை மீண்டும் இணைப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. இந்த முயற்சியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டது. அங்கேயும் தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை. ஐநாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அதன்பின் அண்மையில் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்தித்து உரையாடியிருக்கின்றன. மாகாண சபைத் தேர்தல் ஒன்றை நோக்கிய பேச்சுவார்த்தை அது என்று ஊகிக்கப்படுகிறது.

இவை யாவும் கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் நிகழ்ந்த ஐக்கிய முயற்சிகள் ஆகும். இந்த முயற்சிகள் அனைத்திலும் இரண்டு பொதுப் பண்புகளைக் காணலாம். முதலாவது பொதுப்பண்பு, இந்த முயற்சிகளை முன்னெடுத்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. பின்னணியில் சில சிவில் சமூகங்கள் நின்றன. இரண்டாவது பொதுப் பண்பு, இந்த முயற்சிகள் பெரும்பாலானவற்றை தோற்கடித்தது தமிழரசுக் கட்சி.

தமிழரசுக் கட்சியானது தானே பெரிய கட்சி, தானே முதன்மை கட்சி, தானே தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் கட்சி என்று கருதுகின்றது; கூறிக் கொள்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலில் தோல்வியடைந்த காரணத்தால் தன்னை சுதாகரித்துக் கொள்வதற்காகவும், தன்னை பலப்படுத்திக் கொள்வதற்காகவும் இவ்வாறான ஐக்கிய முயற்சிகளில் ஈடுபடுகிறது என்று தமிழரசுக் கட்சி நம்புகிறது. மேலும் இந்த முயற்சிகளின் பின்னணியில் இருக்கும் சிவில் சமூகங்கள் தமிழரசுக்கட்சிக்கு எதிரானவை அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவானவை என்றும் தமிழரசுக் கட்சி நம்புகின்றது.

முன்னணியின் ஐக்கிய முயற்சிகள் பெரும்பாலானவை தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தும் நோக்கிலானவை என்று தமிழரசுக் கட்சி நம்புகின்றது. அதிலும் குறிப்பாக தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது இரண்டு அணிகள் உண்டு. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது, சிறீதரனை அரவணைத்து அதன் மூலம் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் தலைமைத்துவப் போட்டியை தனக்குச் சாதகமாகக் கையாளப் பார்க்கின்றது என்றும் ஒரு குற்றச்சாட்டு சுமந்திரன் அணியினர் மத்தியில் உண்டு.

இவ்வாறான சந்தேகங்கள் மற்றும் ஈகோக்கள் என்பவற்றின் விளைவாக கடந்த ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய முயற்சிகளுக்கு தமிழரசுக் கட்சி பெரும்பாலும் ஒத்துழைக்கவில்லை. எனவே கடந்த ஆண்டு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய முயற்சிகளில் பெரும்பாலும் குழப்பத்தை விளைவித்தது அல்லது ஒத்துழைக்க மறுத்தது அல்லது ஒரு பெரிய கட்சி, மூத்த கட்சி என்ற அடிப்படையில் பொறுப்போடு முடிவை எடுக்கத் தவறியது தமிழரசுக்கட்சிதான். இங்கே மிக அடிப்படையான பேருண்மை ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். தனக்குள் ஒற்றுமைப்படாத ஒரு கட்சி, ஏனைய ஐக்கிய முயற்சிகளுக்கு எப்படி ஒத்துழைக்கும்?

இதுதான் கடந்த ஆண்டு. தொகுத்துப் பார்த்தால் அது ஒரு தோல்வி ஆண்டு. அந்தத் தோல்விக்குப் பெருமளவு காரணம் மூத்த, பிரதான கட்சியாகிய தமிழரசுக் கட்சிதான். ஒரு மூத்த அண்ணனாக, பொறுப்போடு, பொறுமையோடு, பரந்த மனப்பான்மையோடு ஏனைய கட்சிகளை அரவணைத்து உண்மையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி இருந்திருந்தால் ஆண்டின் முடிவிலாவது குறைந்தபட்சம் கரைத்ததுறைப் பற்று பிரதேச சபையைக் காப்பாற்றி இருந்திருக்கலாம்.

எனவே இப்பொழுது மிகத் தெளிவான ஒரு பார்வை நமக்கு கிடைக்கிறது. கடந்த ஆண்டுகளைப் போலன்றி புதிய ஆண்டின் பலன் நல்லதாக அமைய வேண்டுமாக இருந்தால் அதற்கு ஒரே ஒரு நிபந்தனைதான் உண்டு. அதுதான் ஐக்கியம். ஒற்றுமைப்பட்டால் மட்டும்தான் புதிய ஆண்டு ஒரு வெற்றி ஆண்டாக அமையும். தமிழ்த்தேசிய அரசியலில் இப்பொழுது அதிசயம் அல்லது அற்புதம் என்று சொன்னால் அது ஐக்கியம் மட்டும்தான்.

---





# தமிழக – இந்திய சந்திப்புக்கள் “சபாஷ்...சரியான போட்டிதான்”

**“தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவிடம் வலியுறுத்திய நிலையில் தமிழரசுக்கட்சி அதற்கு நேர்மாறாக மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் கோரியுள்ளது.”**

---------------------------------------------------------------------- **கே.பாலா -**

1958ஆம் ஆண்டில் “வஞ்சி கோட்டை வாலிபன்” என்ற படம் வெளியானது. அந்தப் படத்தில் பத்மினிக்கும், வைஜயந்தி மாலாவுக்குமிடையே நடக்கும் நடனப் போட்டி பாடல் மிகவும் பிரலாபலமானது. இந்தப் பாடலில் பத்மினி, வைஜயந்திமாலா இருவரும் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் நடனமாடி ஒருவரை ஒருவர் கோபத்துடன் முறைத்துப் பார்த்து, நேருக்கு நேர் நாட்டிய நளினங்களை விதம் விதமாக காண்பித்து தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பார்கள் அப்போது நடிகரும் நாயகர்களில் ஒருவருமான டி.கே. ராமச்சந்திரன் “சபாஷ் சரியான போட்டி” என்பார். “கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுதே, எண்ணும் போதே உள்ளம் பந்தாடுதே” என்ற அந்தப்பாடல் அப்போது பட்டிதொட்டியெங்கும் பிரபலமானது. இன்று அந்தப் பாடலை கேட்டாலும் இனம் புரியாத ஒரு கிளர்ச்சி ஏற்படும்.

உண்மையில் இந்தப் பாடல் வெளிவந்த சமயத்தில் இருவரும் உச்சத்தில் இருந்த நட்சத்திரங்கள். மேலும் நாட்டியத்திலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத நம்பர் 1 ஆக இருந்தவர்கள். எனவே இருபெரும் கலைஞர்களுக்கிடையேயான ஈகோவால் இருவருமே இந்த போட்டிக்கு ஒரே இடத்தில் ஆட மறுத்து விட்டனர் என்பதுதான் உண்மை. இதனால் முதலில் பத்மினி ஆடுவதை படமெடுத்து அதை பிரிண்ட் போட்டு கொண்டுபோய் அன்று மாலையே வைஜயந்திமாலாவுக்கு போட்டு காண்பிப்பார்கள். அதைப் பார்த்து வைஜயந்தி மாலா பதிலுக்கு நடனமாடுவார். அது படமாக்கப்பட்டு பத்மினிக்கு போட்டுக் காண்பிக்கப் படும். இப்படியே மாறி, மாறி இருவரும் தனித் தனியாக ஆடியதை இறுதியில் இணைத்து இருவரும் ஒன்றாக ஆடியதைப் போல நமக்கு படம் காண்பித்து விட்டனர். எது எப்படியோ தமிழுக்கு “சபாஷ் ... சரியான போட்டி” என்ற மறக்க முடியாத புகழ் பெற்ற பஞ்ச் வசனத்தை இந்த பாடல் கொடுத்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டது.

சரி இப்போது இந்த விடயம் இங்கே ஏன் என்ற கேள்வி வாசகர்களுக்கு எழலாம். இதற்கும் காரணம் உண்டு. பத்மினி, வைஜயந்திமாலாவுக்கு இடையில் இந்தப்பாடலில் ஏற்பட்ட “ஈகோ” போட்டி போன்று தற்போது இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, உரிமை, இலங்கை அரசுக்கான அழுத்தம் போன்றவற்றில் இந்தியா தலையிட வேண்டுமென வலியுறுத்துவதில் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குமிடையில் மாகாணசபைத் தேர்தலா சமஷ்டியா என்பதில் பத்மினி, வைஜயந்திமாலா போன்று தனித்தனி நடனப் போட்டி ஏற்பட் டிருப்பதுதான் தமிழ் மக்களுக்குள்ள சாபக்கேடாகவுள்ளது.

“தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வாக இலங்கை அரசு ஏக்கிய இராஜ்ஜிய அரசியல் யாப்பினை திணிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், அதனைத் தடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பினை கொண்டுவருவதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும். அந்தவகையில் பிராந்திய வல்லரசாகிய இந்திய அரசு இலங்கை மீது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலையை ஏற்படுத்த தமிழக அரசியல் தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டுமென தமிழகத் தலைவர்களை வலியுறுத்த தமிழ் தேசிய மக்கள் கடந்த 17 ஆம் திகதி சென்னைக்கும் பயணமானது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இந்த தமிழகத் தலைவர்களுடனான சந்திப்புக்கான தமிழக விஜயம் தமது அரசியல் இருப்புக்கு மேலும் இடியை இறக்கி விடுமோ என இலங்கை தமிழரசுக் கட்சியினர் அஞ்சிய நிலையில், உடனடியாகவே “இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்திக்கவுள்ளோம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சிவானந்தன் நவநீதராஜா, சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர் என தமிழரசுக்கட்சி சார்பானவர்களினால் தகவல்கள் வெளியிடப்பட்டன.

தமிழகம் சென்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி - தமிழ் தேசியப் பேரவை, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். தமிழக முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான். விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன், பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ம.க. தலைவர் ராமதாஸ் உள்ளிட்ட பல தலைவர்கள், தரப்புக்களுடன் சந்திப்புக்களை நடத்தி தமிழர்தேசம். இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி யாப்புஉருவாக்கப்பட தமிழகத்தலைவர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுவதுடன் இந்திய மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தினர். இந்த விஜயம் இலங்கை அரசினாலும் உற்று நோக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானநிலையில்தமிழரசுக்கட்சியினரே எதிர்பாராத வகையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொது செயலாளர் சுமந்திரன். சிறீதரன் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சந்தித்தனர். இந்த சந்திப்பில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டுமென இந்தியா தற்போதைய இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற வலியுறுத்தலே தமிழ் அரசியல் தரப்பில் பிரதானமாக இருந்தது.

இந்த சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அழைப்பு விடுக்கப்படாது. அவர் சமஷ்டியை வலியுறுத்தி தமிழகத் தலைவர்களை சந்தித்தது மத்திய அரசுக்கு பிடிக்கவில்லை என்றவாறாக தமிழரசுகட்சிக்கு சார்பான சிலரால் தகவல்களை வெளியிடப்பட்டன. மாறாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தியத் தூதரகத்தினால் ஜெய்சங்கருடனான சந்திப்புக்கு அழைக்கப்பட்ட நிலையில் தமிழரசுக்கட்சியுடன் கூட்டு சேர்ந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பங்காளிக்கட்சித் தலைவர்களான ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சிவானந்தன் நவநீதராஜா, சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோருடன் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளரான நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கும் தான் அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த சந்திப்பில் ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு வருகை தர இருக்கின்றார் அவர் மாகாண சபை முறைமையையே ஒழித்து, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஆளுநர் மூலம் மாகாணங்களை நிர்வகிப்பது பற்றிப் பேசுகிறார். அவருக்குத் தெளிவான அறிவுறுத்தலை புதுடில்லி வழங்க வேண்டும் என்றவாறாகவும் தமிழ் தேசியக்கட்சிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் ரில்வின் சில்வாவின் புதுடில்லி வருகை டித்வா புயல் பாதிப்புக் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுளதாகத் தெரிவித்த ஜெய்சங்கர் மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்பிலும் பெரிதாக அக்கறை காட்டிப்பேசவில்லை. தற்போது இலங்கையில் இயற்கைப் பேரனர்த்த பேரழிவு ஏற்பட்டுள்ள நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்பில் தற்போதைக்கு இலங்கை அரசுடன் பேச முடியாது என்றவாறாகவே ஜெய்சங்கரின் கருத்துக்கள் அமைந்திருந்தன.

இந்த சந்திப்பிலே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முக்கியமாக, இந்திய இலங்கை ஒப்பந்தம், தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள், மக்களுடைய அபிலாஷைகளோடு நிறைவேற்றப்பட வேண்டும் என்பது மிகத்தெளிவாக வலியுறுத்தி இருக்கின்றது. அந்த அபிலாஷைகள் நடைமுறைப்படுத்தப்படுவது என்ற பெயரிலே இலங்கை அரசாங்கம் 13 ஆம் திருத்தத்தை ஒற்றையாட்சி முறைக்குள் கொண்டு வந்து மட்டுப்படுத்தின. 13ஆம் திருத்தம் தொடர்பான ஒற்றையாட்சி கட்டமைப்பு சம்பந்தமாக இலங்கை உச்சநீதிமன்றம் மிக தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றது. அதில், அதிகாரங்கள் மத்தியில் மட்டும்தான் இருக்கலாமே தவிர மாகாணங்களுக்கோ வேறு எந்தஒரு கட்டமைப்புக்கோ வழங்கப்பட முடியாது என்றுள்ளது.

அந்த வகையிலே மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் தான் 13 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை ஒப்பந்தம், தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷ‘களான தமிழ் தேசத்துடைய அங்கீகாரம், தமிழ் தேசத்துடைய தனத்துவமான இறைமையின் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய - குறிப்பாக, திம்பு கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதான திருத்தங்களை உள்ளடக்கியிருந்தபோதும், அவற்றை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்கியதால், 13 ஆம் திருத்தம் நிறைவேற்றி 38 வருடங்களின் பின்னரும் தமிழ் மக்கள் எதையும் அனுபவிக்க முடியாமல் உள்ளது. தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நாங்கள் அடைய முடியாமல் இருக்கிறது.

ஆகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட விடயங்களை நாங்கள் அடைவதாக இருந்தால், அதிலே அடிப்படை மாற்றமொன்று நடைபெறவேண்டும். குறிப்பாக - இலங்கையின் அரசியலமைப்பு ஒரு சமஸ்டி கட்டமைப்பாக மாற்றி அமைக்கப்பட்டே ஆக வேண்டும். இல்லாதுவிடின் - இந்த 13ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து 38 வருடங்களாக இந்தியாவும் அதை நடைமுறைப்படுத்த சொல்லி கேட்கின்ற நிலையில், வரும்காலங்களிலும், நடைமுறைப்படுத்மாறு கோரும் கோரிக்கையையே நாங்கள் தொடர்ந்தும் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். தவிரஅதற்கு அப்பால் எதுவுமே நடக்கப் போவதில்லை என்ற விடயத்தை தெளிவாக ஜெய்சங்கரிடம் வலியுறுத்தினார். தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஒற்றையாட்சிக்குள் காண முடியாது என்பதை இந்திய வெளியுறவு அமைச்சரும் ஏற்றுக்கொண்டார்.

(தொடர்ச்சி 13 பக்கம்)





HAPPY
New Year

அனைவருக்கும் இனிய
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

LOGAN KANAPATHI - MPP, MARKHAM-THORNHILL
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
Tel: 905 – 305 – 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Logan Kanapathi  LoganKanapathi  Logan_Kanapathi  logankanapathi



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24



# MORTGAGE FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தையிட்டி திஸ்ஸ விகாரை "போலியானது" என்கிறார் வட இலங்கையின் சங்க நாயக்க தேரர்

"ராஜமகா விகாரை" என பெயர்ப்பலகைகளை காட்சிப்படுத்தி, இராணுவத்தின் பங்களிப்புடன் காங்கேசன்துறை தையிட்டியில் நிர்மாணிக்கப் பட்டுள்ள விகாரை போலியானது என வடக்கின் பிரதம சங்க நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உண்மையான உரிமையாளர்கள் அப்பகுதியில் வசிக்கும் தமிழ் மக்களே என்பதை ஏற்றுக்கொண்ட வட மாகாண பிரதம சங்கநாயக்க தேரர், அந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி தலையிடாவிட்டால், இனங்களுக்கு இடையில் மோதல்கள் வெடிக்கும் அபாயம் குறித்து எச்சரித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு உறுதிப்பத்திரம் உள்ள காணிகளை யுத்தத்தின் மூலம் கையகப்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரை, உண்மையான திஸ்ஸ விகாரை அல்ல என நாகதீப புராண ரஜமகா விகாராதிபதியும் வட இலங்கையின் பிரதம சங்கநாயக்க தேரருமான நவதகல பதுமகித்தி திஸ்ஸ தேரர் கூறுகிறார்.

"உண்மையான திஸ்ஸ விகாரை தற்போது உள்ள போலியான திஸ்ஸ விகாரைக்கு அருகிலேயே அமைந்துள்ளது. அந்த திஸ்ஸ விகாரை நாகதீப விகாரைக்குச் சொந்தமானது. அதன் உரிமை நாகதீப விகாரையிடமே உள்ளது. ஆனால், இப்போது திஸ்ஸ விகாரை என அழைக்கப்படும் பகுதி காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் வசிக்கும் குடிமக்களுக்குச் சொந்தமானது. யுத்த காலத்தில் குடிமக்களின் காணிகளைக் கையகப்படுத்தி, சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு இடத்தையே திஸ்ஸ விகாரை என்ற பெயரில் போலியான திஸ்ஸ விகாரையாக ஆரம்பித்துள்ளனர்."

ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அப்பகுதியில் வசித்து வரும் தன்னைப்போன்று வேறு எந்த பௌத்தரும் இவ்விடயம் குறித்து அறிந்திருக்க மாட்டார்கள் என பதுமகித்தி திஸ்ஸ நாயக்க தேரர் ஒரு காணொளி உரையின் மூலம் தெரிவித்துள்ளார்.

இராணுவப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம், காங்கேசன்துறை திஸ்ஸ ராஜமகா விகாரையின் விகாராதிபதி சத்தர்மகீர்த்தி சங்கைக்குரிய கிந்தோட்டை நந்தாராம தேரருக்கு, அமரபுர ஸ்ரீ கல்யாணவம்ச நிகாயவின் வட இலங்கையின் உப பிரதம சங்கநாயக்க பதவிக்கான "ஸ்ரீ சன்னஸ் பத்ர" மற்றும் "விஜினி பத" ஆகியவை புத்தசாசன, சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் தலைமையில் கொழும்பில் வழங்கி வைக்கப்பட்டதன் பின்னர், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"53 வருடங்களாக நான் இந்த நாகதீப விகாரையில் இப்பிரதேசத்தின் தமிழ் மக்களுடனேயே வாழ்ந்து வருகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள எமது சகோதர மக்கள் அனைவரும் நாகதீப விகாரையின் தேரர் யார் என்பதை அறிவார்கள். நாம் இதுவரை காலமும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வந்தோம்."

தற்போது வடபுலத்துக்கு வெளியே இருந்து வரும் தேரர்கள் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து விகாரைகளை நிர்மாணித்து வருவதை ஏற்றுக்கொண்ட வட இலங்கையின் பிரதம சங்கநாயக்க நவதகல பதுமகித்தி திஸ்ஸ நாயக்க தேரர், அந்த "செய்யத்தகாத வேலை" தொடர்பில் பதற்றமடைய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

"தற்போது உண்மையில் தேரர்கள் வந்து தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து விகாரைகளை நிர்மாணித்து வருகின்றனர். எனவே, அதனை உண்மையில் செய்யத்தகாத ஒரு வேலையாகவே நாம் பார்க்கிறோம். அதனால் மக்கள் யாரும் பதற்றமடைய வேண்டாம். இந்த இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் நிதானமாகச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. எனவே, அரசாங்கம் இதில் தலையிட்டுச் செயற்பட்டால் நல்லது என்பதுதான் எனது கருத்தாகும்."

உண்மையைக் கண்டறிந்து, திஸ்ஸ விகாரையின் காணிப் பிரச்சினையை சுமூகமான முறையில் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்வது தொடர்பாக இதுவரையில் எந்தவொரு தேரரோ அல்லது அரசாங்கமோ நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் நாகதீப புராண ராஜமகா விகாராதிபதி நவதகல பதுமகித்தி திஸ்ஸ நாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

"அதேபோன்றுதான், நாகதீப விகாரையின் தேரராகிய என்னுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடினால், ஒரு முடிவுக்கு வந்து இது ஒரு போலியான இடமா? அல்லது உண்மையான இடமா என்பதை எம்மால் நிரூபிக்க முடியும். அரசாங்கமோ அல்லது எமது தேரர்களோ ஒருபோதும் அவ்வாறு என்னுடன் தொடர்பு கொண்டு செயற்படவில்லை. எனவே, அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு ஒரு தீர்வை காண்பதே எனது அடிப்படை நோக்கமாக உள்ளது. அப்போதுதான் எமது மக்களுடனும், இங்கு வாழும் சகோதர தமிழ் மக்களுடனும் எம்மால் இலகுவாக வாழ முடியும்."

திஸ்ஸ விகாரையின் காணிப் பிரச்சினையை துரிதமாகத் தீர்க்காவிட்டால், அது அப்பிரதேசத்திலுள்ள ஏனைய பௌத்த விகாரைகளிலும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் தேரர் எச்சரிக்கிறார்.

"இப்படியே போனால் இந்த விகாரையை முன்னிலைப்படுத்தி இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய தேரர்களுக்கும், அதேபோல் இப்பகுதியில் உள்ள விகாரைகளுக்கும் ஒருபோதும் நிம்மதியாக இருக்க முடியாத நிலை ஏற்படும். எனவே, இந்தப் பிரச்சினையை நாம் சுமூகமான முறையில் தீர்ப்பதற்கு அரசாங்கத் தரப்பினரையும் - எமது ஜனாதிபதி அவர்களிடம் நான் வேண்டிக்கொள்வது, ஜனாதிபதி அவர்கள் இதில் முன்னின்று நாகதீப விகாரையின் தேரரையும், அதேபோன்று தையிட்டி பகுதியில் வசிக்கும் தமிழ் மக்களையும், காணி உரிமையாளர்களையும் அவர்களது உறுதிப்பத்திரங்கள் மற்றும் ஆவணங்களுடன் அழைத்து வரச் செய்ய வேண்டும். அவர்களால் அதனை நிரூபிக்க முடியும், எனக்கும் உண்மையான திஸ்ஸ விகாரை எங்குள்ளது என்பதை நிரூபிக்க முடியும்."

இந்தக் காணிப் பிரச்சினை எதிர்காலத்தில் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுப்பதற்கு முன்னதாக பேச்சுவார்த்தை மூலம் இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேரர் இதன்போது மீண்டும் மீண்டும் ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கியிருந்தார்.

"குறிப்பாக நான் ஜனாதிபதியிடம் மீண்டும் வேண்டிக்கொள்வது என்னவென்றால், இது குறித்து கலந்துரையாடித் தீர்வு காணுங்கள். இல்லையென்றால் எதிர்காலத்தில் இதைவிடப் பெரிய பிரச்சினைகள் ஏற்படக்கூடும்."

திஸ்ஸ விகாரையில் தமிழ் மக்கள் உரிமை கோரும் காணியை அவர்களுக்கு விடுவித்துக் கொடுப்பதே விகாராதிபதிக்கு ஒரு உண்மையான கௌரவமாக அமையுமென, திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கு அமரபுர ஸ்ரீ கல்யாணவம்ச நிகாயவின் வட இலங்கையின் உப பிரதம சங்கநாயக்க பதவிக்கான பட்டயப்பத்திரம் மற்றும் கைவிசிறி ஆகியவற்றை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட சங்கைக்குரிய பலபிட்டியே சிறி சீவலி தேரர் பௌத்த அலுவல்கள் அமைச்சரும் பங்கேற்ற அந்த நிகழ்வில் (2025 டிசம்பர் 21) உரையாற்றுகையில் வலியுறுத்தியுள்ளார்.

"மீண்டும் மாதத்துக்கொரு தடவை அதுபோன்ற காணொளிகள் வெளிவராத வகையில், திஸ்ஸ விகாரைப் பிரச்சினையை - எமது அமைச்சரும் இங்கே இருக்கிறார் - எம்மால் தீர்க்க முடிந்தால் மிகவும் நல்லது. எந்தவொரு பிரச்சினைக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. எனவே, எம்மால் அந்த இரு தரப்பினருடனும் பேசி, எமது விகாரைக்குத் தேவையான போதுமான காணியை வைத்துக்கொண்டு ஏனையவற்றை விட்டுக்கொடுக்கலாம். தானம் வழங்கல் என்பது எமது பௌத்த தத்துவத்தில் உள்ள ஒரு விடயமாகும். அவ்வாறு எம்மால் விட்டுக்கொடுக்கக்கூடிய பகுதி ஏதேனும் இருந்தால், அதைக் கோரும் அந்தத் தமிழ் மக்களுக்கு ஒப்படைத்துவிட்டு, இந்தப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடிந்தால், தேரர் நாயக்க பதவியை ஏற்ற நாளில் அது ஒரு பெரிய கௌரவமாக அமையும்."

திஸ்ஸ ராஜமகா விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி 2023 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் விகாரைக்கு அருகில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் மக்கள், சுமார் 14 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 100 பரப்பு (6.2 ஏக்கர்) நிலத்தை இராணுவம் பலவந்தமாகக் கையகப்படுத்தி திஸ்ஸ விகாரையை நிர்மாணித்துள்ளதாகக் குற்றம் சுமத்துகின்றனர்.

"கி.மு. 3 ஆம் நூற்றாண்டு வரையிலான வரலாற்றைக் கொண்ட இந்த விகாரை, தேவநம்பிய திஸ்ஸ மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்பு உள்ளது" என இராணுவம் தெரிவிக்கிறது.

"காங்கேசன்துறை வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையின் புனரமைக்கப்பட்ட விகாரையின் தூபியை வைக்கும் புண்ணிய உற்சவம்" 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றதாக, 2023 ஏப்ரல் 29 ஆம் திகதி இலங்கை இராணுவம் தனது உத்தியோகபூர்வ இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

# யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் வலிகாமம் கிழக்கு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்த திருத்தத்தை அர்ச்சுனா எம்.பி எதிர்த்தபோதும் அமைச்சர் சந்திரசேகரன் ஒப்புதல் வழங்கினார்



யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் அவைத் தீர்மானத்தினை பெறாதது. அவ்வாறான ஓர் ஆவணத்தினை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அனுமதிக்க முடியாது. அதனை வர்த்தமாணிப்படுத்த முடியாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் எதிர்த்தமையினால் விரைவில் உள்ளூராட்சி மன்றங்களின் அவைத் தீர்மான அனுமதியுடன் அணுகுவது என முடிவு எட்டப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் பத்து ஆண்டுக்கான திட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அனுமதி கோரப்பட்டது.

இதன் போது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் 10 ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அவைகள் அமைந்துள்ளன. எனவே இதனை ஏற்பதாயின் உள்ளூராட்சி மன்றங்களின் சபைத் தீர்மானங்கள் அவசியம். சபைத் தீர்மானங்கள் இன்றி அபிவிருத்தியினை ஏற்பது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையும் காத்திரமான அபிவிருத்தி இலக்கினையும் மீறுவதாகும். சபையில் வரைபை நாம் ஆராய்ந்து காத்திரமான பொருத்தமான முடிவுகளை எடுக்கவேண்டும். அதுவரையில் ஒத்திவைக்க வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவில் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் சிவாஜிலிங்கமும் வரைபில் போதாமைகள் காணப்படுகின்றன என்றார். இவ் விடயம் விவாதத்திற்கு உள்ளாகிய போது பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதன், மேற்படி வரைபை இன்றே நிறைவேற்ற வேண்டும் என்றும் நகர அபிவிருத்தி தொடர்பான விடயத்திற்கும் உள்ளூராட்சி மன்றத்திற்கும் என்ன தொடர்பு என கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த தவிசாளர் நிரோஷ் ஆட்சி முறைமை தொடர்பான அறிவில் தாங்கள் பூச்சியமாக உள்ளீர்கள். உள்ளூராட்சி மன்றங்களே அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் அதிகாரமுடையவை. உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி ஒத்துழைப்பின்றி அபிவிருத்தியினை முன்கொண்டு செல்ல முடியாது என்றார்.

இந் நிலையில் மாவட்ட அபிவிருத்தி அனுமதியை வழங்குவோம் பின்னர் தங்களுடைய சந்தேகங்களை உள்ளூராட்சி மன்றங்கள் தீர்த்துக்கொள்ளட்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் தாம் ஒட்டுமொத்தமாக ஏற்க முடியாதெனத் தெரிவித்தார்.

இந் நிலையில் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆராய்ந்து உரிய அவைத் தீர்மானங்களை வழங்க முடியுமா என அரச அதிபர் ம. பிரதீபனினால் கோரப்பட்டது. அதற்கு தவிசாளர்கள் சம்மதித்த நிலையில் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் அமைச்சர் சந்திரசேகரனினால் உள்ளூராட்சி மன்றங்கள் அனுமதியைப் பெற்று எதிர்வரும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் எடுத்துக்கொள்ளப்படும் தெரிவிக்கப்பட்டு விடயம் ஒத்திவைக்கப்பட்டது.

(9 பக்கத் தொடர்ச்சி)

## தமிழக – இந்திய சந்திப்புக்கள் “சபாஷ்... சரியான போட்டிதான்”

அதேவேளை இந்த சந்திப்பிலே கலந்து கொண்ட தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்றும்மாகாண சபை முறைமையிலே 13ஆம் திருத்தம்நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் திரும்பத்திரும்ப கேட்டார்களே தவிர, தங்களுக்கு மக்கள் வழங்கிய ஆணையான ஒற்றையாட்சி கோட்பாடு நிராகரிப்பையும் சமஷ்டி ஆட்சிமுறைமையையும் அவர்கள் வலியுறுத்தவில்லை. ஆனால் அரசியல் தீர்வு தொடர்பாக ஒற்றையாட்சிக்குள் தீர்வுகாண முடியாது என நாங்களும் தெரிவித்தோம். தீர்வு சமஷ்டிக் கட்டமைப்பில் இருக்க வேண்டும் அதற்கு என்ன பெயர் கொடுக்கப்பட்டாலும் அந்த கட்டமைப்பு சமஷ்டியாக இருக்க வேண்டும் என சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார் என சுமந்திரன் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

எது எப்படியோ தமிழகத் தலைவர்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி - தமிழ் தேசிய பேரவை சந்தித்திருப்பதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சந்தித்திருப்பதும் ரில்வின் சில்வா தாமதித்தேனும் புதுடெல்லி செல்லும்போது தமிழர் விடயத்தில் இந்திய அழுத்தம் கொடுக்குமென நம்பலாம். அதேநேரம் தமிழ் தேசிய முன்னணிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி - ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான இந்த இரு நிலைப்பாட்டு அரசியல் போட்டியை “சபாஷ் சரியான போட்டி” என்று கூறத் தோன்றினாலும் இந்த “தனித் தனி நடன ஈகோ” போட்டியினால் தமிழர் தரப்புக்கு ஏதேனும் நன்மைகள் கிடைக்குமா என்பதே கேள்வியாகவுள்ளது.

தமிழரசுக்கட்சியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் தேசியத்தின் இரு பிரதான கட்சிகளாக இருப்பதுடன் இந்த இரு பெரும் கட்சிகளுக்கிடையேயான ஈகோவால் இருவருமே ஒரே அணியாக செயற்பட மறுத்து தனித்தனியே தமிழர் தீர்வு உரிமைகளுக்கான சந்திப்புக்களில் இரு வேறு கொள்கைகளுடன் ஈடுபட்டு வருவதே விமர்சிக்கப்படுகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஸ்டி அரசியல் யாப்பை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவிடம் வலியுறுத்தும் நிலையில் இலங்கை தமிழரசுக்கட்சி - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அதற்கு நேர்மாறாக மாகாண சபைத்தேர்தலை விரைவில் நடத்த அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் கோரியுள்ளது. இதனால் இவ்விரு சந்திப்புகளினாலும் தமிழர்தரப்புக்கு சாதமாக ஏதேனும் நடக்கும் என்பது சந்தேகமே.

## சுனாமி என்ற ஆழிப்பேரலை

சுனாமி என்ற பேரலை சொல்லாமல் வந்த கூற்றுவன்
சொந்தபந்தம் சொத்தையெல்லாம் சுருட்டிச்சென்ற பேயது
சொல்லமுடியாச் சோகங்களை சுமத்தி எம்மண்ணை
சுடுகாடாய் மாற்றிவிட்ட சுடலைமாடன்.

இந்தோனேசியா இந்தியா இலங்கை இனத்தவரை
இரக்கமின்றி அள்ளிச்சென்ற இதயமில்லா இயமன்
இரும்பு இதயம்கொண்ட இன்னல்தரும் இராட்சதன்
இந்தஇடர் வேண்டாமென இறைவனை இறைஞ்சுவோம்.

குஞ்சுகுழந்தை குமரையெல்லாம் கொள்ளையடித்த கொள்ளைநோய்
குடியிருந்த வீட்டையும் கும்பிட்ட கோவிலையும்
குடிநீர்க் கிணற்றையும் கோலக் குடியிருப்பையும்
குந்தியிருந்த நிலத்தையும் கோலிச்சென்ற கொடியவன்.

வாழ்வாதாரம் தந்த வள்ளத்தையும் வலைகளையும்
வாகன வகைகளையும் வாயில்லாச் சீவன்களையும்
வகைதொகை இல்லாமல் வக்கிரம் கொண்டு
வாரிச்சுருட்டி வாயில்போட்ட வாசுகி.

பள்ளிச் சிறுவரையும் பாடசாலைக் கட்டடத்தையும்
பாட்டாளி மக்களையும் பால்குடிக் குழந்தைகளையும்
பாத்திரம் பண்டங்களையும் பால்தரும் பசுமாட்டையும்
பாக்கி வைக்காமல் பாழ்படுத்திய பாதகன்.

ஆண்டாண்டு காலமாய் ஆதரித்த கடலன்னை
ஆவேசம் கொண்டெமை அழித்தது ஏன்?
ஆண்டவரே வந்தெம்மை ஆதரிக்க மாட்டீரா?
ஆண்டுகள் இருபத்தொன் றிலுமாறா எங்கள்மனம்

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

**(குறிப்பு: 26-12-2004ல் ஏற்பட்ட சுனாமி என்ற ஆழிப்பேரலை அழிவின் இருபத்தொரு ஆண்டு நிறைவை நினைவுகூர்ந்து எழுதப்பட்ட கவிதை)**

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட்ட 336 குடும்பங்களுக்கு இளம் பெண்ணியக் குழு அமைப்பு உலர் உணவு பொதிகள் பொருட்கள் வழங்கிவைத்தது

மட்டக்களப்பு மாவட்டத்தில் “டித்வா” புயல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இளம் பெண்ணிக்குழு அமைப்பு யுனெப்ஸ் அமைப்பின் விருத்தி (UNOPS-VRIDDHI) திட்டத்தின் மனிதாபிமான உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதி அனுசரணையுடன் மூன்று கட்டமாக கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் மற்றும் 256 கர்பிணித் தாய்மார்கள் சுடுநீர் போத்தல் உட்பட்ட பொருட்கள் அடங்கிய பொதிகளை 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமைப்பின் தலைவி அஜானி காசிநாதர் தலைமையில் வழங்கிவைக்கப்பட்டது,




இளம் பெண்ணிக்குழு அமைப்பு சூறாவளி மற்றும் வெள்ளத்திற்கு பதிலளிக்கும் விதமாக, யுனிசெப் அமைப்பின் விருத்தி திட்டத்துடன் இணைந்து, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு 1 மில்லியன் ரூபா மதிப்புள்ள உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்து முதற்கட்டமாக ஏறாவூர், களுவங்கேணி மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராம பிரிவுகளைச் சேர்ந்த 122 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சுடுநீர் போத்தல் உட்பட்ட பொருட்கள் அடங்கி பொதிகளும்.

இரண்டாம் கட்டமாக வேப்பவெட்டுவான் கிராம சேவகர் பிரிவு ஏறாவூர் பற்று பிரதேசத்தில் மற்றும் 80 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் மூன்றாம் கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை 28ம் திகதி மூன்றாம் கட்டம் கோறளைப்பற்று மத்திய மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள. காவத்தமுனை, பிறைந்துறைச்சேனை, மாஞ்சோலை, பதுரியா பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 134 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சடுநீர் போத்தல் உட்பட்ட பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அந்தந்த பகுதி கிராம உத்தியோகத்தர்கள், பொது சுகாதார மருத்துவச்சிகள், மகளிர் மேம்பாட்டு அதிகாரிகள் உட்பட்டோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொதிகள் வழங்கி வைத்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# அருச்சுனா எம்.பி பெற்ற தாயாரையே பார்க்கவில்லை. அதற்கு இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இருக்கின்ற வைத்தியர்களே சாட்சி

## கஜேந்திரகுமார் எம்.பி!



இவர் அருச்சுனா எம்.பி பெற்ற தாயாரையே பார்க்கவில்லை. அதற்கு இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இருக்கின்ற வைத்தியர்களே சாட்சி. நான் கதைக்கும்போது நீ கதைக்காதே. குரங்கை கொண்டு வந்து பக்கத்தில் அமர்த்தி இருக்கின்றார்கள். இந்த மடையனை பக்கத்தில் இருத்தியதால் எதுவும் கதைக்க முடியாமல் இருக்கிறது என்றார். கஜேந்திரகுமார் எம்.பி!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது தாயாரை அருச்சுனா எம்.பி திரும்பி கூட பார்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 26ம் திகதி அன்றையதினம் நடைபெற்றது. இதன்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை மத்திய அமைச்சிடம் வழங்குவது தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து தெரிவிக்க முயற்சித்தவேளை அவரை கருத்து தெரிவிக்க விடாமல் அருச்சுனா குழப்பினார். இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அருச்சுனாவில் ஒலிவாங்கியை நிறுத்தினார். இருந்தும் அவர் கூச்சலிட்டு குழப்பியதால் குறித்த விடயத்தை அம்பலப்படுத்தினார்.

# நன்னீரை பாதுகாக்க மண்கும்பானில் இருக்கும் குளங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் பிரகலாதன் வலியுறுத்து!



நன்னீரை பாதுகாக்க மண்கும்பானில் இருக்கும் குளங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என வேலணை பிரதேச சபை உறுப்பினர் பிரகலாதன் வலியுறுத்து சபை நேரத்தில் எடுத்துரைத்தார்.

புதிய நீர் தேக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து, வேலணை - மண்கும்பானில் ஏற்கனவே இருக்கின்ற, சீரமைக்கப்படாத குளங்களை சீர் செய்து தீவகத்தின் நன்னீர் நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் பிரதேச சபையின் உறுப்பினருமான சுவாமினாதன் பிரகலாதன் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை சபையில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மண்கும்பானில் ஏற்கனவே பிரதேச சபைக்குரிய 5 குளங்கள் இருக்கின்றன. இவற்றில் இரு குளங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனையவையும் கடுமையான பாதிப்புக்களுடனேயே இருக்கின்றன.

இவற்றை சீரமைத்தால் மண்கும்பானின் மழை காலங்களில் ஏற்படும் பிரச்சினைக்கும் ஓரளவு தீர்வு காணமுடியும். அதுமட்டுமல்லாது இது விவசாய தேவைகளுக்கும் சாதகமாக அமையும்.

வேலணைக்கே நன்னீர் கொடுக்கும் நன்னீர் வளம் மிக்க எமது மண்கும்பானில் மழை நீரை அதிகளவில் சேகரித்தால் மேலும் நன்னீர் இருப்பை மேம்படுத்திக் கொள்ளலாம்.

அந்த குளங்களுக்கு நிதியை செலவு செய்வது வீண் விரையமற்ற ஆரோக்கியமான ஒரு விடயம். இதை விடுத்து புதிய இருக்கின்ற நீர் நிலைகளை கைவிட்டு புதியவற்றை உருவாக்க முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

அதே நேரம் சாட்டிப் பகுதியின் பாதுகாப்பு அவசியமானது. அதற்கான முயற்சி எடுக்கப்படுமானால் அதை வரவேற்போம் என்றார்.

# யாழ்ப்பாணம் கல்லூண்டாய் வீதியில் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ள வலிகாமம். மேற்கு பிரதேச சபை!



கல்லூண்டாய் வீதியில் விபத்துக்கள், இரவில் வழிப்பறி கொள்ளை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. குறித்த வீதியில் வீதிவிளக்குகள் இல்லாததும் அதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

அந்தவகையில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முயற்சியால் மாகாண அபிவிருத்தி நிதியில் இருந்து 9.3 மில்லியன் ரூபாவும் மற்றும் சபை நிதியில் இருந்து 0.428 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு, கல்லூண்டாய் வீதியில் மின்சார சபையினால் புதிதாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் குமிழ்கள் பொருத்தும் பணிகள் இடம்பெற்றது.

# கனடா வாழ் மனித நேய சமூக செயற்பாட்டாளரான காமலிற்றாவினால் வழங்கப்பட்ட நிதியில் சாவகச்சேரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பெற்றன!





யாழ்ப்பாணம் - சாவகச்சேரி மகிளங்கேணி கல்வி நிலையத்தில் கல்விகற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றைய தினம் நடைபெற்றது.

கனடாவில் வசிக்கும் மனித நேய சமூக செயற்பாட்டாளரான காமலிற்றாவினால் வழங்கப்பட்ட நிதியில், 5வது ஆண்டில் காலடி வைக்கும் பிரீத்தி அறக்கட்டளையின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் செயற்திட்டத்தின் கீழ் இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத் தலைவராக ஜெகநாதன் விவேகானந்தன் நியமனம்!



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால், வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் தலைவராக, சுற்றுலா அபிவிருத்தி ஆலோசகராகப் பணியாற்றிய கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் வைத்து 29ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை ஆளுநர் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார்.

# யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிய மதுவரி திணைக்களத்தின் உத்தியோகத்தர்!



காரைநகர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது இன்றையதினம், காரைநகர் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முன் வரிசையில் அமர்ந்திருந்த அதிகாரி ஒருவர் தொடர்ச்சியாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியது.

மதுவரி நிலையத்தின் அதிகாரி ஒருவரே இவ்வாறு கூட்டத்தில் உறங்கியுள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில், முன் வரிசையில் இருந்தே உறங்குகிறார் என்றால் அவரது செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என விசனம் வெளியிடப்படுகிறது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டததில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளராக சபா குகதாஸ் தேர்ந்தெடுக்கப்பெற்றார்

## கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் எம்பிக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிப்பு!



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 12வது தேசிய மாநாட்டை 2026 தை 24 மற்று 25ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் அதற்கு முன்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் 225 பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களை தெரிவு செய்வதற்குமான தெரிவுக் கூட்டங்கள் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் 27ம் திகதி சனிக்கிழமையன்று, யாழ். மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளரை தெரிவு செய்யும் கூட்டம் கச்சேரியடியில் உள்ள மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பாராளுமன்ற உறுப்பினராகிய செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டார். எனினும் அவருக்கு மேற்படி கூட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றை செயற்குழு கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைப்பாளராக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் மாவட்ட செயற்குழு உறுப்பினர்களால் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் பொதுக்குழு உறுப்பினர்களாக 45 பேர் தெரிவாகினர்.

கட்சியின் பிரதான பொறுப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தி இளையவர்களுக்கு வழிவிடும் வகையில் 12வது மாநாடு அமையவுள்ளதாக ரெலோ கட்சி சார்பாக செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் அசமந்தம் – நோயாளிகள் புறக்கணிக்கப்படுவதால் உயிராபத்து ஏற்படும் என அச்சம்!



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளி ஒருவருக்கு தகுந்த முறையில் மருந்து கட்டாமையினால் அந்த காயம் மோசமான நிலைக்குச் சென்ற பிடித்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட நோயாளியின் மனைவி கருத்து தெரிவிக்கையில், எனது கணவர் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலையில் உள்ளார். கடந்த 16 வருடங்களாக சக்கர நாற்காலியிலேயே அவரை பராமரித்து வருகின்றோம்.

இந்நிலையில் இந்தமாதம் அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதுடன், காலில் கட்டும் ஏற்பட்டது. ஆகையால் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அந்த காயத்திற்கு மருந்து கட்டுவதற்கு செல்கின்றவேளை அவர்கள் அங்கே அசமந்தப்போக்கில் ஈடுபட்டனர். மருந்து கட்டுவதற்கு வெளிநோயாளர் பிரிவுக்கு கொண்டு சென்றால் விடுதிக்கு கொண்டு செல்லச் சொல்வார்கள், விடுதிக்கு சென்றால் வெளிநோயாளர் பிரிவுக்கு கொண்டு செல்ல சொல்லுவார்கள். இவ்வாறு மூன்று தடவைகள் திருப்பி அனுப்பினார்கள்.



தொடர்ச்சியாக மூன்று தடவைகள் மருந்து கட்டாத நிலையிலேயே இன்று அந்த காயத்தில் புளு வைத்துள்ளது. அந்த காயம் பெரிய காயம் என்பதால் ஒன்றுவிட்டு ஒருநாள் மருந்து கட்ட வேண்டும். ஆனால் மூன்று நாட்களுக்கு ஒருதடவை தான் வருமாறு கூறுவார்கள். அவ்வாறு போனாலும் மருந்து கட்ட மாட்டார்கள்.

மருந்து கட்டுமாறு வைத்தியர்கள் கூறினாலும் அங்கு இருக்கின்ற பணியாளர்கள் அதனை செய்ய மாட்டார்கள். 8ஆம் இலக்க விடுதியில் இருக்கின்ற ஒரு பணியாளர் நோயாளர்களை மிகவும் கீழ்த்தரமாக நடத்துகின்றார். மருந்து கட்டுவதற்கான துணியை வெளியில் வாங்கி வருமாறு கூறுவார்கள். அதையும் நாங்கள் வாங்கி கொடுக்கின்றோம்.

தனியார் வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்றாலும் காயம் பெரிதாக இருப்பதால் மருந்து கட்டுவதற்கு மறுப்பு தெரிவிக்கின்றனர்.

நானும் உடல்நிலை பாதிக்கப்பட்ட ஒருவர். நடக்க முடியாத அவரை வைத்தியசாலைக்கு கொண் செல்லும்போது அங்கு இருக்கின்ற சுகாதார பணியாளர்கள் சக்கர நாற்காலியில் அவரை கொண்டு செல்வதற்கு உதவி செய்யவும் மாட்டார்கள்.

அவர் சந்திரசிகிச்சையின் பின்னர் வீடு திரும்பிய நிலையில் ஆஸ்துமா காரணமாக வைத்தியசாலை விடுதியில் மீண்டு அவரை சேர்ப்பித்தோம். அப்போது காயத்தில் இருந்து துர்நாற்றம் வந்த நிலையில் அதனை அங்கு இருக்கின்ற பணியாளர்களுக்கு பலதடவைகள் தெரியப்படுத்தினோம். ஆனால் அவர்கள் மருந்து கட்டவில்லை. பின்னர் இரவு 9.30 மணியளவில் வைத்தியர் பிரசன்னாவிடம் கூறியவேளை கடமை முடிந்து அவர் வீடு செல்ல இருந்த நிலையிலும் உடனடியாக தியேட்டருக்கு எடுத்து தானே மருந்து கட்டினார்.

மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே நாங்கள் இவ்வாறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்கின்றோம். முச்சக்கர வண்டிக்கு காசு கொடுக்க வேண்டும், ஒருவர் நேரத்தை ஒதுக்கி கொண்டு செல்ல வேண்டும். நாங்கள் ஆர்வமாக கொண்டு சென்றாலும் அவர்கள் சேவையை சரியாக செய்வதில்லை.

கடந்த 2023ஆம் ஆண்டு வவுனிக்குளத்தில் எமது இரண்டு ஆண் பிள்ளைகள் தண்ணீரில் மூழ்கிய உயிரிழந்தனர். தம்பி தண்ணீரில் மூழ்கிய நிலையில் அவரை காப்பாற்றுவதற்காக அண்ணா சென்ற நிலையில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு இரண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்த தந்தைக்கும் இந்த நிலை என எண்ணும்போது வேதறையாக இருக்கிறது.

வறுமையில் வாடும் மக்கள் சிகிச்சைக்காக வரும்போது அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குங்கள். தனியார் வைத்தியசாலைக்கு செல்வதற்கு எல்லோரிமும் பணம் இருக்காது என்றார். அந்தத் தாய்!



# தொல்லியல் சட்டம், கொள்கையை மாற்றாது கூட்டங்களில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உபதேசம் செய்வதால் பயனில்லை

## தவிசாளர் நிரோஷ் கண்டனம்

தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை மட்டுப் படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் மாற்றத்தினைக் கொண்டு வாருங்கள். அதற்கு உங்கள் அரசாங்கத்திற்கு முழு பலமும் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. அதனை நீங்கள் செய்யாது தொல்லியல் திணைக்கள சாதாரண உத்தியோகத்தர்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் அழைத்து எச்சரிப்பது தீர்வல்ல. என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இந்த வாரம் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கோட்டை பகுதியில் தொல்லியல் திணைக்களம் கல் தூண்களை நடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் உள்ளிட்ட ஆளும் கட்சி எம். பிக்கள் தொல்லியல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட உத்தியோகத்தரை கடுமையாக சாடினர்.

இந் நிலையில் கருத்துத் தெரிவித்த பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தொல்லியல் திணைக்களம் எவருக்கும் கட்டுப்படாததாக இன முரண்பாடுகளையும் பௌத்த சிங்கள பேரினவாதத்தினை விஸ்தரிக்கும் திணைக்களமாகவே உள்ளது. வரலாற்று ரீதியில் தொல்லியல் திணைக்களத்திற்கு நாட்டில் அளிக்கப்பட்டுள்ள மிகவும் மிலேச்சத்தனமான சட்டங்களின் வாயிலாக திட்டமிட்ட பௌத்த பேரினவாத அணுகுமுறை முன்னெடுக்கப்படுகின்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கக் கூடிய அரசாங்கத் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் போல சாதாரணமாக தொல்லியல் உத்தியோகத்தர்களைக் கண்டிக்கின்றீர்கள். இதனை நீங்கள் தமிழ் மக்களிடத்தில் அரசியலுக்காகவோ அல்லது நீங்கள் ஆளும் கட்சி என்பதை மறந்தோ செய்யலாம். இதனால் அடக்கு முறையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு பயன் விளையப் போவதில்லை.

சட்டங்களின் வாயிலாகவும் சுற்றுநிருபங்களின் வாயிலாகவும் அர கொள்கைகளின் வாயிலாகவும் தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆக்கிரமிப்புக்களைச் செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதே உண்மை.

இதனைத் தடுப்பதற்கு பாராளுமன்றில் மிகப் பெரும்பான்மை உள்ள அரசாங்கம் பொறுப்புடன் இன முரண்பாடுகளை விளைவிக்கும் சட்டங்களையும் சுற்றுநிருபங்களையும் அரச கொள்கைகளையும் மாற்றவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு ஓய்வு பெற்ற அதிபருக்கு எதிரான முறைப்பாடு தொடர்பாக பிரதமர் செயலகம் விடுத்துள்ள பணிப்புரை!


PRIME MINISTER'S OFFICE

முல்லைத்தீவு வலயப் பாடசாலை ஒன்றின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஹஒருவரின் ஓய்வூதியத்தை நிறுத்தி வைக்குமாறு அவரின் முறைகேடான மற்றும் ஊழல் மிக்க செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த முறைப்பாட்டை கல்வி அமைச்சிற்கு பாரப்படுத்தி நடவடிக்கைக்கு பிரதமர் செயலகம் பணிப்புரை வழங்கியுள்ளது.

பிரதமர் செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளர் வு. ஸ்ரீமன்ன மேற்கண்ட முறைப்பாட்டை 12.12.2025 ஆம் இலக்க கடிதம் மூலம் கல்வி அமைச்சுக்கு பாரப்படுத்தி உள்ளார்.

மேற்குறித்த அதிபர் அரச சட்டதிட்டங்களை மீறி சமூக ஊடகங்கள் வாயிலாக நிதி திரட்டியதும் மற்றும் பாடசாலையுடன் தொடர்பு இல்லாத பாடசாலையின் பெயரில் இயங்கும் நிதியம் ஒன்றிற்கு நிதி அனுசரணை வழங்குமாறு கோரிய கடிதம் போன்றன குற்றச்சாட்டுகளாக பிரதமர் அலுவலகத்தில் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வெண்கரம் அமைப்பினால் வழங்கப்பெற்ற கற்றல் கையேடுகள்!



டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கற்றல் கையேடு வழங்கும் பணி வெண்கரம் அமைப்பினால் 29ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் ஆரம்பிக்கப்பட்டது.



வெண்கரம் அமைப்பின் சித்தங்கேணி அலுவலகத்தில் இந்த பணியானது, வெண்கரத்தின் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெண்கர அமைப்பின் செயற்பாட்டாளர்கள் தன்னார்வ ரீதியாக மக்களிடம் சேர்த்த நிதியை பயன்படுத்தி இவ்வாறு கற்றல் கையேடுகளை தயாரித்து வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையிலேயே அதன் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில், கலந்துகொண்ட அனைவரும் வெண்சுடர்கள் ஏற்றி வைத்தனர். அதனை தொடர்ந்து உரைகள், கையேடுகள் வழங்கல் என்பன இடம்பெற்றன.

வெண்கரம் அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சங்கானை கல்வி கோட்டத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் நொபேட் உதயகுமார், வலிகாமம் கல்வி வலய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் சுகுணா, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடமராட்சியில் கடலில் குளித்த போது காணாமல் போன உதைப்பந்தாட்ட வீரரான இளைஞனின் சடலம் கரையொதுங்கியது!



இரண்டு நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு பகுதியில் வசிக்கும் இளைஞர் கடலில் காணாமல் போன நிலையில் அவரது சடலம் 30ம் திகதி அதிகாலை கரையொதுங்கியுள்ளது.

நண்பர்களுடன் தாளையடி கடற்கரைக்கு நீராடச் சென்ற வேளை அவர் கடலோடு இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இவரை தேடும் பணி இரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் குறித்த இளைஞனின் சடலம் அதே பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 27 வயதுடைய உதைபந்தாட்ட வீரர் ஆவார்.

சடலத்தை மருதங்கேணி பொலிசார் பார்வையிட்டதுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர்.



# வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட் வேலன் சுவாமியை சந்தித்து நலம் விசாரித்த கத்தோலிக்க மதகுருமார்கள்!

அண்மையில் தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்ட வேலன் சுவாமி அவர்கள் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் அவரை கத்தோலிக்க மதகுருமார் நேரில் சென்று நலம் விசாரித்துள்ளனர்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் மக்களோடு மக்களாக வேலன் சுவாமியும் கலந்து கொண்டார். இந்நிலையில் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையிலேயே அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

கத்தோலிக்க குருக்களான அருட்தந்தை வசந்தன், அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா, அருட்தந்தை ஜேக்குமார் அடிகளார் ஆகியோர் 29ம் திகதி திங்கட்கிழமை நல்லூர் சிவ ஆலயத்தில் வேலன் சுவாமிகளை பார்வையிட்டு நலம் விசாரித்தனர்.

மதகுருமார்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமைக்கு கத்தோலிக்க மதகுருக்கள் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளமையை யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெகுஜன அமைப்புக்கள் பல பாராட்டியுள்ளன.

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிய 12 வயதேயான யாழ்ப்பாண மண்ணின் மாணவி!



யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவி ஒருவர் தான் சிறுக சிறுக சேகரித்த உண்டியல் பணத்தை டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் கையேட்டினை தயாரிப்பதற்காக வழங்கிய நெகிழ்வான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், டித்வாத புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் கையேடுகளை தயாரிப்பதற்கான நிதி சேகரிப்பில் வெண்கரம் அமைப்பின் தன்னார்வலர்கள் ஈடுபட்டு வந்தனர்.

அந்தவகையில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் தரம் 07இல் கல்வி பயிலும் மாணவியான பு.சர்ஜனா என்ற சிறுமி, தனது அன்றாட செலவுகளை தியாகம் செய்து, சிறுக சிறுக சேகரித்த உண்டியல் பணத்தினை கற்றல் கையேடுகளை தயாரிப்பதற்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் கடந்த 29ம் திகதி வெண்கரம் மக்கள்சேவை அமைப்பினர் குறித்த மாணவியின் சமூக நலனை பாராட்டி, அவரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் 24 மணிநேரமும் பொழியும் பனி!

யாழ்ப்பாணத்தில் 24 மணிநேரமும் பனிப்பெய்து வருகிறது. இதனால் அசாதாரண காலநிலை நிலவுகிறது.

தொடர்ச்சியாக பனிப்பெய்து வருவதால் அன்றாட கடமைகளை மக்கள் கஷ்டத்தின் மத்தியில் முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ச்சியான பனி காரணமாக தடிமல், இருமல், சளி போன்ற நோய்களாலும் மக்கள் அவஸ்தை படுவதை அவதானிக்க முடிகின்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.



# இலங்கை மலையகத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மொன்றியால் திருமுருகன் ஆலய நிர்வாக சபையினர் வழங்கிய 20 லட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள்







கனடா மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலய நிர்வாக சபையினரின் மனமுவந்த நிதி அன்பளிப்பில் இலங்கையின் மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தின் ராகலைப் பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு உலர் உணவு அடங்கிய பொதிகள் அண்மையில் வழங்கப்பெற்றன.

அண்மையில் இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக அங்குள்ளவர்களுக்கு உதவிகள் தேவை என்பதை அறிந்த கனடா மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலய நிர்வாக சபையினர் தகுந்த அமைப்புக்கள் மற்றும் சேவையாளர்களை அணுகிய போது திருவாளர்கள் பிரதீபன் மகேந்திரன் மற்றும் மனோஜ் ராஜகோபால் மற்றும் அவர்களது குழுவினர் இந்த பணிக்கு ஏற்றவர்கள் என்பதை அறிந்து கொண்டார்கள்.

பின்னர் இலங்கையின் மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தின் ராகலைப் பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தேயிலைத் தோட்டங்களின் முகாமையாளர்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் அவர்களது மேற்பார்வையில் தொழிலாளர்களுக்கு உலர் உணவு அடங்கிய பொதிகள் அண்மையில் வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

கனடிய செய்திகள் Canadian News

# ரொறன்ரோ "தாள லயா" இசைக் கல்விக் கூடம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதன் 21வது ஆண்டு நிறைவு விழா!

கனடா ரொறன்ரோ நகரில் நீண்ட காலமாக இயங்கிவரும் ஆசிரியர் ரவி செல்லையா அவர்களின் "தாள லயா" இசைக் கல்விக் கூடம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதன் 21வது ஆண்டு நிறைவு விழா கடந்த 27-12-2025 அன்று சனிக்கிழமையன்று மாலை செந்தாமரை விழா மண்டபத்தில் நடைபெற்றது.


பல இசையாசிரியர்கள், இசைக் கலைஞர்கள், பெற்றோர்கள், இசை பயிலும் மாணவ மாணவிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் மண்டபத்தில் கூடியிருந்தார்கள்.

மேற்படி ஆண்டு விழாவிற்கு தமது ஆதரவை வழங்கியிருந்த ஸ்காபுறோ விஜயா யுவல்லறி நகை மாளிகையின் உரிமையாளர்களுக்கு "தாள லயா" இசைக் கல்விக் கூடத்தின் ஆசிரியர் ரவி செல்லையா மற்றும் பெற்றோர் ஆகியோர் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.









நிறுவனத்தின் ஆசிரியரும் இசைக் கலைஞருமான ரவி செல்லையா அவர்கள் தபேலா மற்றும் கீபோர்ட் ஆகிய இசைக் கருவிகளை வாசிப்பதில் அனுபவமும் ஆற்றலும் கொண்டவர். அத்துடன் சிறந்த பாடகரும் கூட.

அன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக பாடகரும் பொறியியலாளருமான இசைப் பிரியன் - கனகராஜா அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். வாழ்த்துரைகளை வழங்க வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் மற்றும் "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

மேற்படி "தாள லயா" இசைக் கல்விக் கூடம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதன் 21வது இசை மற்றும் இசைக் கருவிகள் தொடர்பாக பயின்று வரும் மாணவ மாணவிகளின் திறன்களை அறியும் வகையில் தொடர்ச்சியாக மேடையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதில் பல பாடக பாடகிகளுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பெற்றமை பாராட்டுக்குரியதாகும்.

அன்றை நிகழ்ச்சியில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அவர்களின் பாராட்டுச் சான்றிதழ்களை "உதயன்" லோகேந்திரலிங்கம் மற்றும் இசைக் கலைஞர் நர்த்தனன் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு வழங்கி கௌரவித்தனர்.


மொத்தத்தில் நல்லதோர் இசைச் சமர்ப்பணம் ஒன்றை கண்டும் கேட்டும் ரசிக்கக் கூடியவகையில் தனது நிறுவனத்தின் 21வது ஆண்டு விழாவை ஏற்பாடு செய்த இசையாசிரியரும் பாடகருமான ரவி செல்லையா அவர்களையும் குழுவினரையும் அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

***செய்தி: சத்தியன், படங்கள்: ஜரிஏ வீடியோ கெங்கா***

---



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1177

## சொக்கவளவு சோதிவிநாயக ஆலயம்

### குப்பிளான், யாழ்ப்பாணம்

இலங்கையைச் சிவபூமி எனத் திருமூலநாயனார் போற்றியுள்ளார். ஈழத்தின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம், ஒரு காலத்திலே ஞானபூமியாகச் சிறப்புற்று விளங்கியுள்ளது. இத்தகைய சிறப்பிற்கு இங்கு வாழ்ந்த அருளாளர்களும் அவர்கள் வகுத்த நெறிகளும், ஆலயங்களும் அவற்றின் மூலம் மக்கள் கடைப்பிடித்த சீரிய வாழ்க்கையும் காரணமாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலே காணப்படுகின்ற ஒவ்வொரு பிரதேசமும், ஒவ்வொரு கிராமமும் பல்வேறு நிலையிலே சிறப்புடையனவாகக் காணப்பட்டாலும், அந்தந்தப்பிரதேசங்களிலே அமைந்திருந்த ஆலயங்கள் மக்கள் வாழ்க்கையின் மேன்மையை மேலும் உயர்த்த உதவின.

இவ்வாறான கிராமங்களுள் குப்பிளான் கிராமமும் தனிச்சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. சைவமும் தமிழும் செழித்து வாழும் செழுமை கொண்டது இக் கிராமம். இக்கிராமம் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மயிலிட்டி தெற்கு. கட்டுவன் ஆகிய கிராமங்களை எல்லையாகக் கொண்டு விளங்குகின்றது. குப்பிளான் கிராமத்திலே பல கோவில்கள் காணப்படினும், இருபெருங்கோவில்களான கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலயமும், சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயமும் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன.

யாழ்ப்பாணமாவட்டத்தில் வலிகாமம் தெற்கில் தெய்வமணங்கமழும் குப்பிளான் கிராமம் அமைந்துள்ளது. ஆலயவரலாறுகளோடு ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களின் வரலாறுகளையும் அறிவது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. இவ்வூரிலே காணப்பட்ட சஞ்சீவிகளில் ஒன்றான குப்பிளாய் என்னும் ஒருவகைப் பூண்டு, இவ்விடத்திலே அடர்த்தியாக வளர்ந்திருந்தமையால் இவ்வூர் குப்பிளான் என்னும் பெயரைப் பெற்றது.

இந்துக்கள் தனித்து வாழும் இவ்வூரின் முதன்மைத் தொழிலாகக் கமத்தொழில் காணப்படுகின்றது. சைவக்குருக்களும், அந்தணர்களும் இங்கு வாழ்ந்து தமிழும் சைவமும் தழைக்க உதவியுள்ளனர். வாழையடி வாழையாக இப்பெருமக்கள் இங்கு வாழ்ந்தமைக்குச் சான்றாகக் குருக்கள்கேணி, குருக்கள் வளவு, ஐயர் கிணற்றடி என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. இவ்வூரிலே திண்ணைப்பள்ளி முறை செல்வாக்குப் பெற்றிருந்தமையை பள்ளிமால் என்ற இடம் சுட்டி நிற்கின்றது. இவ்வூர் அற்பை, விளுவளை, ஆனந்தக்குப்பிளான் எனவும் பெயர் பெறும். கற்கரை, பத்தகல், கோட்டார்வளவு, பள்ளிமால், குப்பிளான், தேராப்புலம், கழிமலை, வீரமனை, தைலங்கடவை, குயாம்புலம், குருக்கள் வளவு, எட்டுத்திட்டி போன்ற குறிச்சிப்பெயர்களும் வழக்கிலுண்டு. குப்பிளான் என்ற குறிச்சிப் பெயரே ஊர்பெயராகவும் விளங்குகின்றது.

சைவத்தின் காவலராக விளங்கிய நாவலர் பெருமானது முதற்பெரும் சீடரும், காசிவாசியுமாகிய சித்தாந்த சிகாமணி சிவஸ்ரீ செந்திநாதையர் அவர்கள் குப்பிளான் கிரமத்திற்குப் பெருமை சேர்த்தவர். இவர் தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும்பணியாற்றியுள்ளார். இத்தகைய சிறப்புக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட குப்பிளான் கிராமத்தின் இருதயம்போலச் சொக்கவளவு விளங்குகின்றது. இங்கு விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமான், சொக்கவளவு சோதிவிநாயகராக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். இவ்வாலயம் சுமார் பன்னிரண்டு நிலப்பரப்பிலே அமைந்துள்ளது. இவ்வாலயம் ஏறத்தாழ 300 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை கொண்டது.

குப்பிளான் கிராமத்திலே எழுந்தருளியுள்ள சொக்கவளவு சோதிவிநாயகப் பெருமானின் ஆலயவரலாறு, நல்லைநகர் நாவலர் பெருமானின் முதன்மைச் சீடராக விளங்கிய காசிவாசி செந்திநாதஐயர் அவர்களின் சந்ததியினரோடு ஆரம்பமாகின்றது. முற்காலத்திலே இவ்வாலயம் அமைந்திருந்த இடம் பல்வேறு தெய்வீக விருட்சங்களைக் கொண்ட வனமாகக் காணப்பட்டுள்ளது. இவ்வாலயத்தைச் சூழ, சைவக் குடிகளும், வேத சிவாகம நெறியில் வாழ்ந்த அந்தணக் குடிகளும் வாழ்ந்தனர். இவர்கள் திண்ணைப்பள்ளிகளை அமைத்து சைவமும், தமிழும் வளர உதவியுள்ளனர். இப்பெருமக்களுள் முக்கியமானவராகக் காசிவாசி செந்திநாதையர் அவர்கள் விளங்கியுள்ளார்.

ஆரம்பகாலத்தில், தெய்வீக விருட்சங்களின் நடுவே காணப்பட்ட பலாமரத்தின்கீழ் விநாயகப்பெருமானுக்கு மண்ணாலாகிய மடாலயம் அமைத்து வழிபட்டு வந்துள்ளார்கள். அக்காலத்திலே இங்கு எழுந்தருளியுள்ள விநாயகரை சொக்கவளவு கற்பக விநாயகர் என அழைத்துப் போற்றியுள்ளனர்.

" தலையில் தடபடெனப்பபடு குட்டுடன் சர்க்கரை
மொக்கியகைக் கடதட கும்பக்களிறு "

என்று அருணகிரி சுவாமிகள் விநாயகரை விளக்கியுள்ளார். ஆஞ்ஞை என்னும் புருவமத்தியில், ஞானசோதியைத் தோற்றும் ஒரு ஆதாரமாக, விநாயகப் பெருமான் முன்னிலையில் குட்டுவதும், தோப்புக்கரணம் போடுவதும் இவ்வாதாரத்தை அசைவிக்கும் செயலாக முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

***வளரும்..***

உலக செய்திகள் World News

# மருத்துவமனையில் நல்லகண்ணு நலமுடன் உள்ளார் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தகவல்



நல்லகண்ணுவை யாரும் வந்து பார்க்கக்கூடாது என்று மருத்துவர்கள் கண்டிப்புடன் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு (வயது 101). இவர் கடந்த ஆகஸ்டு 22-ந் தேதி வீட்டில் தவறி கீழே விழுந்ததில் தலையில் காயம் ஏற்பட்டதால் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். உடல்நிலை சீரானதை தொடர்ந்து அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். இதனிடையே, நல்லக்கண்ணுவுக்கு மீண்டும் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் கடந்த சனிக்கிழமை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிறுநீரகத்தொற்று ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நல்லக்கண்ணு நலமுடன் உள்ளார் என்று இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் வீரபாண்டியன் தெரிவித்துள்ளார். நல்லகண்ணுவை பார்க்க கட்சித்தோழர்கள், நண்பர்கள், பொதுமக்கள் யாரும் மருத்துவமனைக்கு வர வேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் வீரபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில், நல்லகண்ணு உடல் நலம் பாதிக்கப்பட்டு ராஜீவ்காந்தி அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு தற்போது நலமாகவுள்ளார். ஆனால், அவரை யாரும் வந்து பார்க்கக்கூடாது என்று மருத்துவர்கள் கண்டிப்புடன் அறிவுறுத்தியுள்ளனர். எனவே, கட்சித்தோழர்கள், நண்பர்கள், பொதுமக்கள் யாரும் மருத்துவமனைக்கு வருகை தர வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் விஜேயின் தமிழக வெற்றிக் கழகம் பக்கம் திரும்புகிறதா?

## மருத்துவர் ராமதாஸ் மகள் தெரிவிப்பு



ஆட்சி மாற்றம் வேண்டும் என மருத்துவர் ராமதாசின் மகள் ஸ்ரீகாந்தி கூறினார்.

பாமகவில் தந்தை - மகனுக்கு இடையே கட்சியை யார் கைப்பற்றுவது என்பதில் மோதல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு டில்லி உயர்நீதிமன்றத்தில் நடந்து வந்தாலும் மருத்துவர் ராமதாஸ் - அன்புமணிக்கு இடையேயான யுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆரம்பத்தில் இருந்தே மருத்துவர் ராமதாஸ் திமுக கூட்டணியையும், அன்புமணி பாஜக கூட்டணியையும் விரும்பினார். கூட்டணி விஷயத்தில் 2 பேரும் இரு துருவங்களாக இருந்ததால், பிரச்சினைக்கு அதுவே முக்கிய காரணமாக அமைந்தது.

ஆனால், சேலத்தில் நடைபெற்ற பாமக பொதுக்குழுவில் பேசிய அக்கட்சியின் செயல் தலைவரும், மருத்துவர் ராமதாசின் மகளுமான ஸ்ரீகாந்தியின் பேச்சு ஏதோ பாமக அணி மாற இருக்கிறதோ என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

அவர் பேசும்போது, "அன்புமணி மேடைக்கு மேடை பேசும்போது ஜி.கே. மணியையும், அருள் எம்.எல்.ஏ.வையும் திமுகவின் கைக்கூலி, திமுகவின் அடிமை என்று கூறிவருகிறார். அவர்கள் தான் (அன்புமணி) ஆர்.எஸ்.எஸ்.-ன் அடிமைகள். 2026 தேர்தலில் பாமக ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக மாற வேண்டும். ஆட்சி மாற்றம் வேண்டும். 2026 தேர்தல் வியூகத்தை மருத்துவர் ராமதாஸ் வகுத்துவிட்டார். யாருடன் கூட்டணி, யாருக்கு சீட் என அவருக்கு தெரியும். 25 எம்.எல். ஏக்களுடன் சட்டசபைக்கு செல்வோம். ஆட்சியில் பங்கு பெறுவோம்" என்றார்.

ஸ்ரீகாந்தியின் பேச்சை வைத்து பார்க்கும்போது, அன்புமணியை ஆர்.எஸ்.எஸ். அடிமைகள் என்று கூறுவதால், பாஜகவுடன் மருத்துவர் ராமதாஸ் கூட்டணி அமைக்கப்போவதில்லை என்பது உறுதியாகிறது. அடுத்து, ஆட்சியில் மாற்றம் வேண்டும், அதில் நமக்கு பங்கு வேண்டும் என்கிறார். இதை வைத்துப்பார்த்தால், தேர்தலில் திமுக தோற்க வேண்டும் என்று கூறுகிறார்.

மேலும், ஆட்சியில் பங்கு என்பதை திமுக ஒருபோதும் ஏற்காது. இப்போதைக்கு ஆட்சியில் பங்குதர தயாராக இருப்பது தவெக மட்டுமே. அதுவும் 25 எம்.எல்.ஏ.க்களுடன் சட்டசபைக்கு போவோம் என்கிறார். தவெகவை தவிர வேறு எந்தக் கூட்டணியும் டாக்டர் ராமதாஸ் தரப்புக்கு 25 தொகுதிகள் தராது. எல்லாவற்றையும் கூட்டி, கழித்து பார்த்தால் பாமகவின் டாக்டர் ராமதாஸ் தரப்பு, தவெக கூட்டணியில் இணையும் என்றே தெரிகிறது.

# திமுக ஆட்சியில் கொலைவெறியுடன் திரியும் சிறார்கள் என்று சாடுகின்றார் நயினார் நாகேந்திரன்



சிறார்களின் மன ஆரோக்கியம் போதைப் பழக்கத்தில் சிதைந்து கிடப்பது பெரும் ஆபத்தானது என நயினார் தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது: திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ரெயில் நிலையம் அருகே வடமாநிலத் தொழிலாளி ஒருவர் மீது 17 வயதுடைய நான்கு சிறுவர்கள் கஞ்சா போதையில் அரிவாளால் கொலைவெறித் தாக்குதல் நடத்தி அதை "ரீல்ஸ்" ஆகப் படம்பிடித்துப் பதிவிட்டுள்ள சம்பவம் நெஞ்சைப் பதை பதைக்க வைக்கிறது.

புத்தகப்பையைத் தூக்கிக் கொண்டு கனவுகளோடு கல்லூரிக்குச் செல்ல வேண்டிய இளம் பருவத்தினர், பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்தி போதையில் இப்படித் தடம் புரள்வதைப் பார்க்கையில் ஒருபுறம் வேதனையாகவும், மறுபுறம் பயமாகவும் உள்ளது. சகமனிதரை ரத்தம் சொட்டச் சொட்ட தாக்கியது மட்டுமன்றி, அதைக் காணொளியாகப் படம் பிடித்துச் சிலாகிக்குமளவிற்கு சிறார்களின் மன ஆரோக்கியம் போதைப் பழக்கத்தில் சிதைந்து கிடப்பது சமூகத்திற்குப் பெரும் ஆபத்தானது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க களத்திற்கு வராமல் சினிமா பாணியில் காணொளி வெளியிடும் முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் சட்டம் ஒழுங்கோ சமூகவலைதளங்கள் வரை சந்தி சிரிக்கிறது. பார்த்தால் வெட்டுவேன், பேசினால் குத்துவேன், கண்டித்தால் கொலை செய்வேன் என்று சொல்லும் ரவுடிகளின் கூடாரமான திமுகவிடம் ஆட்சி அதிகாரத் தைக் கொடுத்ததன் பாவத்தை தான் தற்போது தமிழகம் தாங்கி நிற்கிறது.

அனைத்திற்கும் கூடிய விரைவில் ஒரு முடிவு கட்டப்படும்! தமிழகம் மீட்கப்படும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. — காங்கிரஸ் கூட்டணியை உடைக்கும் கனவு பலிக்காது என செல்வப்பெருந்தகை ஆவேசம்



தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் கூறியதாவது: இந்தியா கூட்டணி வலுவாக உள்ளது. தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியை யாராலும் முறிக்க முடியாது. காங்கிரசை சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி தமிழக அரசின் கடன் குறித்து விமர்சித்து இருப்பது அவரது சொந்த கருத்து.

கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்ற அவரது பகல் கனவு பலிக்காது. உத்தரபிரதேச புல்டோசர் ஆட்சியின் யோகி ஆதித்யநாத் குரலாக பிரவீன் சக்கரவர்த்தி பேசுகிறார். தமிழகத்தில் கூட்டணி குறித்து அகில இந்திய தலைமை தான் முடிவு செய்யும். பிரவீன் சக்கரவர்த்தி தன்னுடைய வளர்ச்சி மற்றும் விளம்பரத்திற்காக பேசுகிறார். அவர் மீது அகில இந்திய தலைமையிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை காலூன்ற வைக்க உளவு வேலை பார்ப்பவர்களை அனுமதிக்க முடியாது. ஜோதிமணி எம்.பி. வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில், "தமிழ்நாட்டை உத்தரபிரதேசத்துடன் ஒப்பிடுவது நியாயமற்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் செயல்பாடுகள் கவர்னர் மூலம் முடக்கப்படுகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம் மாநிலத்தின் சாதனைகளை நாமே குறைத்து மதிப்பிடுவது சரியல்ல. பா.ஜ.க.விற்கு ஆயுதம் எடுத்து கொடுப்பது நமது வேலையல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

# வெற்றிமாறன் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன்?



தமிழ் சினிமாவின் வெற்றிகரமான இயக்குநர்களில் ஒருவரான வெற்றிமாறன் தற்போது சிம்புவை வைத்து "அரசன்" படத்தை இயக்கி வருகிறார். இப்படம் வடசென்னை கதையை மையமாகக் கொண்டு கேங்ஸ்டர் படமாக உருவாகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதனிடையே, கமல்ஹாசன் மற்றும் வெற்றிமாறன் ஆகியோர் ஒரு புதிய படத்திற்காகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக சினிமா வட்டாரத்தில் தகவல் வெளியாகி இருந்தது. ஆனால் அது குறித்து எந்த அறிவிப்பும் உறுதியாக அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், கமல்ஹாசன் - வெற்றிமாறன் கூட்டணி பிரமாண்டமான படத்திற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டால், அது மிகவும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் தியாகராஜன் குமாரராஜா — விஜய் சேதுபதி கூட்டணி



பிரபல இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா. இவர் ஆரண்ய காண்டம், சூப்பர் டீலக்ஸ் போன்ற படங்களை இயக்கியுள்ளார். இந்நிலையில் இயக்குநர் தியாகராஜன் மற்றும் நடிகர் விஜய் சேதுபதி மீண்டும் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

2019-இல் வெளியான சூப்பர் டீலக்ஸ் படத்தில் விஜய் சேதுபதி திருநங்கை வேடத்தில் நடித்து தேசிய விருது பெற்றார். இந்த வெற்றிக்குப் பிறகு இருவரும் மீண்டும் புதிய படத்தில் இணையும் தகவல் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்தப் புதிய படத்துக்கான பேச்சுவார்த் தைகள் விரைவில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படப் பிடிப்பு பிப்ரவரி 2026 முதல் தொடங்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் போன்ற ஒன்றை ஆரம்பிப்பதிலும் பார்க்க அதை உறுதியுடனும் நம்பிக்கைகளுடன் தொடர்ந்து இயக்குவதே பாராட்டுக்குரியது"

## கனடா - இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் 13வது ஆண்டு விழாவில் தனக்குரிய வர்த்தக மேம்பாட்டு விருதினைப் பெற்றுக்கொண்ட பின்னர் உரையாற்றுகையில் கனடியத் தமிழர் வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார் தெரிவிப்பு!




"இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தைப் போன்ற ஒரு பல நோக்கங்கள் கொண்ட அமைப்பை ஆரம்பிப்பதிலும் பார்க்க அதை உறுதியுடனும் நம்பிக்கைகளுடன் தொடர்ந்து இயக்குவதே பாராட்டுக்குரியது. பல அமைப்புக்களின் கடந்த பல வருடங்களாக இணைந்து பணியாற்றி வருகின்றவன் என்ற வகையில் எனது நம்பிக்கை எதுவென்றால் சங்கம் ஒன்றின் அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாக சபையினருக்கு இடையில் எப்போதும் உறவுகள் சீராக இருப்பது நிச்சயமான ஒன்றல்ல. எனினும் அவர்களுக்கிடையே ஏற்படும் உள்ளக முரண்பாடுகள், நிதி தொடர்பான பிரச்சனைகள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள் என்பவற்றை கலந்துரையாடி சுயவிமர்சனம் செய்து தீர்த்து வைத்து பின்னர் சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைப்பதே எமது கடமையாகும். இவற்றை நோக்கும் போது உங்களது இந்த "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின்" வளர்ச்சியையும் ஆற்றும் பணிகளையும் பார்க்கும் போது நான் பூரண திருப்தியடைகின்றேன். எனவே தான் எனக்கு அளிக்கப்பெற்ற கௌரவத்தை பெறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும். உங்கள் வர்த்தகர்கள் சங்கமான இனிவரும் காலங்களில் எமது தமிழ் சமூகத்தின் இளையவர்களை உள்வாங்கி அவர்களுக்கு உங்களது வர்த்தக அனுபவங்கள் மற்றும் வெற்றிகளைப் போதித்து அவர்களை உயரத்திற்கு கொண்டு சென்றால்தான் எமது சமூகமும் வளர்ச்சியடையும். இதைக் கருத்தில் கொண்டு தங்களது எதிர்காலப் பணிகள் தொடர வேண்டும் என வாழ்த்தியும் நன்றி கூறியும் விடைபெறுகின்றேன்".

இவ்வாறு கடந்த சனிக்கிழமை 27-12-2025 அன்று கனடா ஸ்காபுரோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் 13வது ஆண்டு விழாவும் விருதுகள் வழங்கும் வைபவத்திலும் உரையாற்றிய விருதாளர்களில் ஒருவரும் பல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளருமான கணேசன் சுகுமார் வர்த்தகமும் சமூக சேவையும் கணிப்பிட்டு வழங்கப்பெற்ற வாழ்நாள் சாதனையாளர் விருது கணேசன் சுகுமார் அவர்களுக்கும் அவர்களும் சிறந்த சமூக உறவிற்கான விருது அருண் குலசிங்கம் அவர்களுக்கும் இசைத்துறை சார்ந்த வெற்றியாளர் விருது அரவிந்தன் மகேசன் அவர்களுக்கும்.

கணக்கியல் துறை மற்றும் வருமான வரி ஆலோசனை விருது வேல். புருசோத்தமன் அவர்களுக்கும் சிறந்த சமூக சேவையாளர் விருது ஜோதி பிரபாகரன் அவர்களுக்கும் கணக்கியல் மற்றும் நிதி மேலான்மை விருது சின்னத்துரை மகேந்திரநாதன் அவர்களுக்கும் சிறந்த தொழில் வழங்குவோர்க்கான விருது பொன்னையா வில்வரத்தினம் அவர்களுக்கும் வழங்கப்பெற்றன.

அத்துடன் கனடாவில் மிகவிரைவில் அமையவுள்ள "தமிழ்ச் சமூக மையம்" நிறுவப்பெறுவதற்கான நிதியை மேலும் பெற்றுக்கொள்ளும் வகையில் அங்கு உரையாற்றிய சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் அவசியமான விடயங்களை சபையோரிடம் அன்பாக எடுத்துக் கூ றினார்.

விழாவை ஆரம்பத்திலிருந்து திருவாளர்கள் கென் கிருபா மற்றும் ஜஸ்ரின் போல் ஆகியோர் நேர்த்தியாகத் தொகுத்து வழங்கினார்கள்.










தெரிவித்தார்.

முன்னர் குறிப்பிட்டது போன்று கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் தனது 13வது ஆண்டு விழாவை மிகச் சிறப்பாக அன்று ஏற்பாடு செய்திருந்ததை கலந்து கொண்ட அனைவரும் பாராட்டிச் சென்றனர். அத்துடன் முக்கிய விருதுகளை தமதாக்கிக் கொண்டு புளாங்கிதம் அடைந்த விருதாளர்கள் எழுவரும் மன நிறைவுடன் அங்கு காணப்பெற்றனர் என்றால் அது மிகையாகாது.

விழாவிற்கு சங்கத்தின் தற்போதைய தலைவரான சோம. சச்சிதானந்தம் அவர்கள் தலைமை தாங்க பிரதம விருந்தினராக கல்வியாளரும் வர்த்தக சமூகத்தைச் சார்ந்தவருமான சி. கனகலிங்கம் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.

மேலும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களான திருவாளர்கள் செ. கிருஸ்ணகோபால் - கேதா நடராஜா - அருண் குலசிங்கம் - மு. அரியராஜா - இ. விஜயகுமாரன் - கருணாகரன் மற்றும் பாஸ்டர் சோதி செல்லா உட்பட பலர் இவ்வருட விழா வெற்றிகரமாக நடைபெற தங்கள் பங்களிப்பை வழங்கியிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தின் விழாவிற்கு பிரதான அனுசரணையாளர்களாக ஸ்காபுரோ விஜயா யுவல்லறி ஸ்தாபனத்தார் விளங்கினார்கள். அத்துடன் நிறுவனத்தின் சார்பில் பலர் அழகிய சீருடைகளுடன் கலந்து கொண்டவை சிறப்புக்குரியதாகும்.

இவ்வருடத்தின் விழா வர்த்தகச் சாதனைகளையும் சமூக அக்கறையையும் ஒன்றிணைத்த ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

வர்த்தகத்துறையில் சாதனை படைத்த ஏழு பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தனர். தனிநபர் வெற்றியை சமூக மதிப்பாக மாற்றும் முயற்சியாக இந்த விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

விருதுகள் வழங்கல் என்ற நோக்கத்திற்கு அப்பால் மேலும் சில முக்கிய அம்சங்களும் இந்த விழாவில் அடங்கியிருந்தமை பாராட்டுக்குரியது ஆகும். இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு அவர்களது வாழ்க்கையை ஓரளவு வசதியாகக் கொண்டு செல்ல உதவும் திட்டத்தின் அடிப்படையில் மேலும் ஏழு அன்பர்கள் தாமாக முன்வந்து பங்களத்த காரணத்தால் மேடையில் கௌரவிக்கப்பெற்றனர்.

இவ்வருடத்தின் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடா நடத்திய தனது 13வது ஆண்டு விழாவினூடாக சமூக நோக்கம் கொண்ட தனது பாதையில் தொடர்ந்தும் செயற்படுவதை கண்கூடாக காண முடிந்தது என்ற திருப்தியும் விழாவில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் தோன்றியது.

இவ்வருடத்தின விருதுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் கனடிய தமிழர் சமூகத்தால் நன்கு அறியப்பெற்றவர்களாக தெரிந்தார்கள்.

## ஔடதம்



*காலையில் எழுந்தது*
*தொடக்கம்*
*கடுமையான உடல் வலியும்*
*சோம்பலுமாய்*
*வேலைக்கும்*
*போகாமல் விடுப்பெடுத்து*
*விதம் விதமாய் குப்பிகளில்*
*இருந்த*
*குளிகைகளை விழுங்கியும்*
*டப்பிகளில் எஞ்சியிருந்த தைலத்தை*
*மிருதுவாய் தடவியும்..*
*சற்றும் தணியாமல் இருந்த உபாதைகளை*
*எப்படிக் களையலாம் என்றெண்ணியவேளையில்*
*சட்டென்று வழி சொன்னாள் குடும்பத் தலைவி*
*குடும்ப வைத்தியரிடம் போய் வாருங்கள் என்று*
*தலைச் சுற்றும் பலயீனம் தெரிந்தும்*
*தடுமாறும் தன்மை எச்சரித்தும்*
*சரியென்று எழுந்து சாப்பாட்டு மேசையருகில்*
*சென்றபோது*
*முனகியது அங்கிருந்த கண்ணாக் குப்பியொன்று*
*"யாமிருக்கப் பயமேன்" என்று*
*கைகளில் அதை எடுத்துப் பார்த்த போது*
*அதனுள்*
*வாரங்கள் சிலவாய் தேனில் ஊறிய*
*சிறிதானஇஞ்சித் துண்டுகள்*
*சிரித்தபடி தயாராய் இருந்தன.*

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1552 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 2, 2026

## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிய 12 வயதேயான யாழ்ப்பாண மண்ணின் மாணவி!



யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவி ஒருவர் தான் சிறுக சிறுக சேகரித்த உண்டியல் பணத்தை டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் கையேட்டினை தயாரிப்பதற்காக வழங்கிய நெகிழ்வான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
இந்நிலையில் கடந்த 29ம் திகதி வெண்கரம் மக்கள்சேவை அமைப்பினர் குறித்த மாணவியின் சமூக நலனை பாராட்டி, அவரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 16ம் பக்கம்)

## இலங்கை மலையகத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மொன்றியால் திருமுருகன் ஆலய நிர்வாக சபை வழங்கிய 20 லட்சம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள்



கனடா மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலய நிர்வாக சபையினரின் மனமுவந்த நிதி அன்பளிப்பில் இலங்கையின் மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தின் ராகலைப் பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பெற்ற உலர் உணவு அடங்கிய பொதிகள் அண்மையில் வழங்கப்பெற்றன.
அண்மையில் இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக அங்குள்ளவர்களுக்கு உதவிகள் தேவை என்பதை அறிந்த கனடா மொன்றியால் அருள்மிகு திருமுருகன் ஆலய நிர்வாக சபையினர் தகுந்த அமைப்புக்கள் மற்றும் சேவையாளர்களை அணுகிய போது திருவாளர்கள் பிரதீபன் மகேந்திரன் மற்றும் மனோஜ் ராஜகோபால் மற்றும் அவர்களது குழுவினர் இந்த பணிக்கு ஏற்றவர்கள் என்பதை அறிந்து கொண்டார்கள். (தொடர்ச்சி 16ம் பக்கம்)

## தொல்லியல் சட்டம், கொள்கையை மாற்றாது கூட்டங்களில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உபதேசம் செய்வதால் பயனில்லை என தவிசாளர் நிரோஸ் கண்டனம்



தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் மாற்றத்தினைக் கொண்டு வாருங்கள். அதற்கு உங்கள் அரசாங்கத்திற்கு முழு பலமும் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. அதனை நீங்கள் செய்யாது தொல்லியல் திணைக்கள சாதாரண உத்தியோகத்தர்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் அழைத்து எச்சரிப்பது தீர்வல்ல. என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.
இந்த வாரம் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கோட்டை பகுதியில் தொல்லியல் திணைக்களம் கல் தூண்களை நடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் உள்ளிட்ட ஆளும் கட்சி எம்.பிக்கள் தொல்லியல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட உத்தியோகத்தரை கடுமையாக சாடினர்.
(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## தையிட்டி விகாரை போராட்டத்தின் போது பொலிசார் என்னைத் தாக்கிய முறையானது கொலை செய்யவோ அன்றி ஊனமாக்கவோ மேற்கொண்ட முயற்சி என்கிறார் வேலன் சுவாமிகள்!



”தையிட்டி விகாரைக்கு அருகில் நாம் நடத்திய போராட்டத்தின் போது பொலிசார் என்னைத் தாக்கிய விதமானது கொலை செய்யவோ அன்றி என்னை முற்றாக ஊனமாக்கவோ பொலிசார் மேற்கொண்ட முயற்சி ”என்று தமிழ் உணர்வாளர் வேலன் சுவாமிகள் அவர்கள் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்
தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட தம்மை பொலிஸார் தாக்கியமை ஒரு கொலை முயற்சி என வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.



## தமிழக – இந்திய சந்திப்புக்கள் ''சபாஷ்' சரியான போட்டிதான்''

“தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக தமிழர் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சம்ʻடி அரசியல் யாப்பை தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவிடம் வலியுறுத்திய நிலையில் தமிழரசுக்கட்சி அதற்கு நேர்மாறாக மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவிடம் கோரியுள்ளது.

- கே.பாலா

---

1958ஆம் ஆண்டில் “வஞ்சி கோட்டை வாலிபன்” என்ற படம் வெளியானது .அந்தப் படத்தில் பத்மினிக்கும், வைஜயந்தி மாலாவுக்குமிடையே நடக்கும் நடனப் போட்டி பாடல் மிகவும் பிரலாபலமானது. இந்தப் பாடலில் பத்மினி, வைஜயந்திமாலா இருவரும் ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் நடனமாடி ஒருவரை ஒருவர் கோபத்துடன் முறைத்துப் பார்த்து, நேருக்கு நேர் நாட்டிய நளினங்களை விதம் விதமாக காண்பித்து தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பார்கள்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)